Postal Reg.No. GDP-39/2017-2019

بسم الله الرحمن الرحيم نحمده ونصلّى على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 2

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 4

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

27 ரபீவுஸ் ஸானி 1438 ஹிஜ்ரி கமரி 26 சுலஹ் 1396 ஹிஜ்ரி ஷம்ஸி

26 ஜனவரி 2017

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து -லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல -னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதனால் ஒளியின் நீரூற்று எனக்குள் ஓடிக் கொண்டிருக்கின்றது. உலகில் இஸ்லாம் மட்டுமே உண்மை என்பது எனக்கு காட்டப்பட்டிருக்கின்றது. அவ்வாறு எனக்கு கூறப்பட்டிருக்கின்றது; எனக்கு புரிய வைக்கப்பட்டிருக்கின்றது.**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி [அலை] அவர்களின் கூற்றுகளிலிருந்து...

இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதனால் ஒளியின் நீரூற்று எனக்குள் ஓடிக் கொண்டிருப்பதை நான் பார்க்கின்றேன். மேலும் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த அன்பின் காரணமாக மட்டும் இறைவனுடன் உரையாடுகின்ற மற்றும் துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படுகின்ற அந்த உயர்வான தகுதியும் எனக்கு கிடைத்திருக்கின்றது. இது உண்மையான நபியைப் பின்பற்றுபவரைத் தவிர வேறு எவருக்கும் கிடைக்க முடியாது. இந்துக்கள் மற்றும் கிறித்தவர்கள் போன்றோர் தங்களது பொய்யான கடவுளர்களிடம் துஆ செய்து செய்து மரணித்துப் போனாலும் கூட அவர்களுக்கு அந்த தகுதியைப் பெற முடியாது. மற்றவர்கள் யூகத்தின் அடிப்படையில் ஏற்றுக் கொண்டுள்ள அந்த இறை வார்த்தைகளை நான் கேட்டுக் கொண்டிருக்கின்றேன். உலகில் இஸ்லாம் மட்டுமே உண்மையாகும் என்பது எனக்கு காட்டப்பட்டிருக்கின்றது. அவ்வாறு எனக்கு கூறப்பட்டிருக் -கின்றது. எனக்கு புரிய வைக்கப்பட்டிருக்கின்றது. இவையெல்லாம் ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பின்பற்றியதன் அருளினால் உமக்கு கிடைத்திருக்கின்றது என்று எனக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது. எனக்கு எவையெல்லாம் கிடைத்திருக் -கின்றனவோ அவற்றிற்கு இணையானவை மற்ற மதங்களில் இல்லை. ஏனென்றால், அவை பொய்யில் உள்ளன. இப்போது எவராவது உண்மையை வேண்டுபவராக இருக்கின்றார் என்றால் அவர் இந்துவாக இருந்தாலும் அல்லது கிறித்தவராக இருந்தாலும் அல்லது ஆரியராக இருந்தாலும் அல்லது யூதராக இருந்தாலும் அல்லது பிராமணராக இருந்தாலும் அல்லது வேறு யாராக இருந்தாலும் இது அவருக்குள்ள சிறந்த சந்தர்ப்பமாக இருக்கின்றது. அவர் எனக்கு எதிராக போட்டிற்கு நிற்கட்டும். நான் அல்லாஹ் ஜல்லஷானுஹுவின் மீது சத்தியம் செய்து கூறுகின்றேன். மறைவான விஷயங்கள் வெளிப்படுவதிலும் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதிலும் என்னுடன் அவரால் போட்டி போட முடிந்தால் நான் ஏறக்குறைய பத்தாயிரம் ரூபாய் மதிப்புள்ள எனது அசையாத சொத்துக்கள் அனைத்தையும் அவரிடம் ஒப்படைத்து விடுவேன். அவர் திருப்தி அடையும் வகையில் அபராதத் தொகையைச் செலுத்துவதில் அவரை திருப்திப்படுத்துவேன்.

*(ஆயினயே கமாலாத்தே இஸ்லாம். ரூஹானி கஸாயின் தொகுதி 5 பக்கம் 276)*

## அஹ்மதிய்யத்தின் தலைமையகமான காதியான் தாருல் அமானில் 122 -வது ஆண்டு மாநாடு இறையருளால் வெற்றிகரமாக நடைபெற்றது

**முஸ்லிம் தொலைக்காட்சி அஹ்மதிய்யா மூலமாக ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் மாநாட்டில் பங்கு பெற்றவர்களுக்காக ஆற்றிய ஆன்மாவிற்கு எழுச்சியூட்டக்கூடிய நிறைவுரை:**

✤ 42 நாடுகளிலிருந்து கண்ணியத்திற்குரிய விருந்தினர்கள் கலந்து கொண்டனர். 14,242 பேர் ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டனர். ✤ ஹுஸூர் அவர்கள் நிறைவுரையாற்றிய சந்தர்ப்பத்தில் இலண்டனில் 5,230 பேர் அங்கு ஒன்று கூடியிருந்தனர். ✤ தஹஜ்ஜுது தொழுகை, திருக்குர்ஆன் விளக்கவுரை மற்றும் இறைவனை நினைவு கூர்வது ஆகியவற்றால் நிரம்பியிருந்த சுற்றுச்சூழலில் மாநாடு நடைபெற்றது. ✤ கண்ணியத்திற்குரிய ஆலிம்களின் கருத்துச் செறிவுள்ள சொற்பொழிவுகள் ✤ மார்க்க தோற்றுனர்களின் மாநாடு ✤ விருந்தினர்களின் அறிமுக சொற்பொழிவுகள், நாட்டின் மற்றும் வெளிநாட்டின் மொழிகளில் சொற்பொழிவுகளின் மொழியாக்கத்திற்கான ஏற்பாடு ✤ ஜமாஅத் சகோதரர்களின் அறிவில் அதிகரிப்பை ஏற்படுத்துவதற்காக தர்பிய்யத் விஷயங்கள் அடங்கிய குறும்படம் காட்டப்பட்டது. பல அரிய தகவல்களைத் தருகின்ற கண்காட்சியும் நடத்தப்பட்டது. புதிதாக பைஅத் செய்தவர்களுக்காகவும் தப்லீகின் கீழுள்ள ஜமாஅத் சகோதரர்களுக்காகவும் தப்லீக் கூட்டங்கள் நடைபெற்றன. ✤ 26 நிகாஹ்விற்கான அறிவிப்புகள் செய்யப்பட்டன ✤ பத்திரிகைகள் மற்றும் மின் ஊடகங்கள் மூலமாக மாநாடு பற்றி விரிவாக விளம்பரம் செய்யப்பட்டது. ✤ அமைதி நிறைந்த நல்ல சீதோஷண நிலையில் மாநாட்டின் அனைத்து நிகழ்ச்சிகளும் இனிதே நிறைவுற்றன. ✤ அல் கலம் என்ற திருக்குர்ஆன் வசனங்களை கையால் எழுதுகின்ற Project நடைபெற்றது. ✤ அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் இந்தோனேஷியாவிலிருந்து 183 பேர் தனி விமானம் மூலம் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

## பணியாளர்கள் தொடர்பான ஆய்வு நிகழ்ச்சி

2016 ஆம் ஆண்டின் காதியான் ஆண்டு மாநாட்டிற்கான பணியாளர்கள் தொடர்பான ஆய்வு நிகழ்ச்சி 22 டிசம்பர் 2016 -ல் நடைபெற்றது. ஹுஸூர் அவர்களின் பிரதிநிதியான காதியான் ஜமாஅத்தின் உள்ளூர் அமீரும் நாஸிர் அஃலாவுமாகிய மதிப்பிற்குரிய மவ்லானா முஹம்மது இனாம் கோரி சாஹிப் அவர்கள் சரியாக 10.00 மணிக்கு அஹ்மதிய்யா விளையாட்டு மைதானத்திற்கு வந்து பணியாளர்களுடன் முஸாபா செய்தார்கள். மாநாட்டு பணியாளர்கள் அனைவருமே குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாகவே வரிசையில் நின்று

*(தொடர்ச்சி 11-வது பக்கம்...)*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

நமது எஜமானர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பிறந்த மாதம் ரபீவுல் அவ்வல் மாதமாகும். ஆனால், முஸ்லிம்களின் நிலைகளின் மீது நமக்கு வேதனை ஏற்படுகின்றது. அவர்கள் இந்நாளை மனித இனத்தின் கருணையாளர் மற்றும் அகில உலகங்களுக்கும் அருட்கொடையாக வந்தவரின் பிறந்த நாளாகக் கொண்டாடுகின்றனர். ஆயினும், قُلُوبُهُمْ شَتّٰى அவர்களின் உள்ளங்கள் சிதறிக் கிடக்கின்றன (59:15) என்பதை உண்மைப்படுத்தக் கூடியவர்களாக அவர்கள் உள்ளனர். இவர்களில் பெரும்பாலார் ஒருவர் மற்றவரின் இரத்தத்தைக் குடிக்க விரும்புகின்றனர். நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள், முஸ்லிம்களின் கைகளினாலேயே கொலை செய்யப்படுகின்றனர் என்ற செய்தி தினமும் செய்தித்தாள்களில் வருகிறது. அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் பெயரில் இவை அனைத்தையும் மிகவும் துணிவுடனும் வெட்கமின்றியும் அவர்கள் செய்கின்றனர்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இந்த நிலைமையின் வடிவத்தை வரைந்து காட்டியுள்ளார்கள். இந்நிலையைக் கண்டு இஸ்லாத்தின் மீது வேதனை கொண்டுள்ள முஸ்லிம்கள் ஒருபோதும் அவநம்பிக்கை அடைந்து விடக் கூடாது என அன்னார் கூறினார்கள். அதுபோன்ற காலகட்டத்தில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் வாக்களிக்கப்பட்ட மஹ்தி தோன்றுவார். அவர் தனது எஜமானரின் முழுமையான தொண்டன் என்ற ரீதியில் முஸ்லிம்களையும், முஸ்லிம் அல்லாதவர்களையும் உண்மையான இஸ்லாமிய போதனைகளை அறியச் செய்வார். மேலும் இஸ்லாத்தின் அழகிய, ஒளிமயமான போதனைகளைக் கொண்டு உலகை ஒளிமயமாக்குவார். பின்னர் மீண்டும் அவர் உம்மத்தே வாஹிதா - ஒன்றிணைந்த சமுதாயத்தை உருவாக்குவார்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் காத்தமுன்னபிய்யீன் ஆவார்கள். இது ஒவ்வொரு முஸ்லிமின் கொள்கையாகும். அதில் நம்பிக்கை கொள்ளாத வரை ஒருவரின் ஈமான் முழுமையானதாக இருக்க முடியாது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் ஷரீஅத் முழுமை பெற்று விட்டது. ஆனால், இந்த குழப்பவாதிகளான ஆலிம்கள் பொதுமக்களின் உணர்வுகளைத் தூண்டி விடுகின்றனர். கத்மே நுபுவ்வத் கொள்கையில் அஹ்மதிகள் நம்பிக்கை கொள்வதில்லை என்று கூறுகின்றனர். இதற்கு நாம் இன்னாலில்லாஹ்... ஓதியவாறு 'லஃனத்துல்லாஹி அலல் காதிபீன் - பொய்யர்களின் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாவதாக' என்று கூறுவதைத் தவிர வேறொன்றும் சொல்வதற்கில்லை. எவர் அஹ்மதியாக தன்னைக் கூறிக் கொண்டு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை காத்தமுன்னபிய்யீன் என நம்பிக்கை கொள்வதில்லையோ அவர் தீயவரும், கட்டுப்படாதவரும், இஸ்லாத்தின் வட்டத்தை விட்டு வெளியேறியவரும் ஆவார். அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்திற்கு அதுபோன்ற நபருடன் எந்த சம்பந்தமுமில்லை. ஆயினும், ஒரு விஷயம் உறுதியானதாகும். அது என்னவென்றால், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் காத்தமுன்னபிய்யீன் என்பதற்கு என்ன பொருள் கொடுத்தார்களோ அதே பொருளைத்தான் அஹ்மதிகளும் கொடுக்கின்றனர். அதனை அல்லாஹ் திருக்குர்ஆனிலும் கூறியுள்ளான். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை பின்பற்றாத மற்றும் அவர்கள் கொண்டு வந்துள்ள ஷரீஅத்திற்கு வெளியே இருக்கின்ற எந்த நபியும் இனி வர முடியாது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கூற்றுக்கள், மார்க்கப் பெரியார்களான ஆலிம்களின் மேற்கோள்கள், குறிப்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இறை ஞானம் நிறைந்த அகப்பார்வைக்கு எழுச்சியூட்டக்கூடிய கூற்றுக்களின் ஒளியில் கத்மே நுபுவ்வத் தொடர்பான விளக்கத்தையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயரிய அந்தஸ்து தொடர்பாகவும் ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

12 ரபீவுல் அவ்வல் என்ற ரீதியிலும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை கண்ணியப்படுத்துதல் மற்றும் கத்மே நுபுவ்வத் ஆகியவற்றின் பெயரில் நான்கு நாட்களுக்கு முன்பு பாகிஸ்தானிலுள்ள துல் மியால் என்ற இடத்தில் மவ்லவிகளும், குண்டர்களும் ஒன்று சேர்ந்து ஊர்வலங்கள் நடத்தினர். நமது பள்ளிவாயிலின் மீது தாக்குதல் நடத்தினர்.

உலகம் முழுவதிலும் அஹ்மதிய்யா ஜமாஅத் சார்பாக பெருமானார் (ஸல்) அவர்கள் தூய வாழ்க்கை பற்றி எடுத்துக் கூறுகின்ற மாநாடுகள் நடத்தப்பட்டது தொடர்பாகவும் முஸ்லிம்களுக்கும் முஸ்லிம் அல்லாதவர்களுக்கும் அகிலங்களுக்கெல்லாம் அருட்கொடையாக தோன்றிய பெருமானார் (ஸல்) அவர்களது வாழ்வின் நிலைமைகளை எடுத்துக் கூறுவதற்கு ஜமாஅத் மேற்கொண்ட பணிகள் தொடர்பாகவும் அதன் மூலமாக ஏற்பட்ட நல் விளைவுகள் பற்றியும் வரலாற்றுச் சான்றுகள் மூலம் ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் மார்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்**
**16 டிசம்பர் 2016** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1395 -ஆம் ஆண்டு **ஃபத்ஹ்** மாதம் **16 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ ـ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ـ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ـ اِيَّاكَ نَعْبُدُ

وَ اِيَّاكَ نَسْتَعِيْنُ ـ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ـ صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ـ

நாம் இன்றைய நாட்களில் இஸ்லாமிய மாதம் ரபீவுல் அவ்வலைக் கடந்து கொண்டிருக்கின்றோம். ரபீவுல் அவ்வல் 12 ஆம் தேதி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிறந்தார்கள் என்பதால் இந்த மாதம் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகின்றது. மேலும் இந்த மாதம் இஸ்லாமிய உலகில் அதிலும் குறிப்பாக இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் சிறப்பாக கொண்டாடப்படுகின்றது. ஓர் எகிப்திய அறிஞரின் ஆய்வின்படி ரபீவுல் அவ்வல் 9 ஆம் தேதி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பிறந்தார்கள் என்று ஹஸ்ரத் சாஹிப் ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மது M.A அவர்கள் தனது சீரத் காத்தமுன்னபிய்யீன் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்கள். (ஹஸ்ரத் சாஹிப் ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மது M.A அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன்னபிய்யீன் என்ற நூலின் பக்கம் 93 –ல் காண்க.)

எவ்வாறிருப்பினும், நமது எஜமானர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பிறந்த மாதம் ரபீவுல் அவ்வல் மாதமாகும். ஆனால், முஸ்லிம்களின் நிலைகளின் மீது நமக்கு வேதனை ஏற்படுகின்றது. அவர்கள் இந்நாளை மனித இனத்தின் கருணையாளர் மற்றும் அகில உலகங்களுக்கும் அருட்கொடையாளரின் பிறந்த நாளாகக் கொண்டாடுகின்றனர். ஆயினும், قُلُوبُهُمْ شَتّٰى அவர்களின் உள்ளங்கள் சிதறிக் கிடக்கின்றன (59:15) என்பதை உண்மைப்படுத்தக் கூடியவர்களாக அவர்கள் உள்ளனர். رُحَمَآءُ بَيْنَهُمْ ருஹமாவு பைனஹும் – அவர்கள் தங்களுக்கு இடையில் மிகவும் கருணையுடன் நடந்து கொள்வர் (48:30) என்ற பண்பை அல்லாஹ் முஸ்லிம்களின் சிறப்பம்சமாக எடுத்துரைக்கின்றான். ஆனால், இவர்கள் கருணையுடன் நடந்து கொள்வது என்பது ஒருபுறம் இருக்கட்டும். இவர்களில் பெரும்பாலார் ஒருவர் மற்றவரின் இரத்தத்தைக் குடிக்க விரும்புகின்றனர். நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள், முஸ்லிம்களின் கைகளினாலேயே கொலை செய்யப்படுகின்றனர் என்ற செய்தி தினமும் செய்தித்தாள்களில் வருகிறது. இவ்விஷயங்கள் அனைத்தும் அல்லாஹ்வும் அவனது தூதரும் மிகவும் வெறுக்கக் கூடிய விஷயங்களாகும். அவர்கள் அநீதியிழைக்க விரும்பினால் அநீதியிழைத்துக் கொள்ளட்டும். ஆனால், இவ்விஷயங்களை அவர்கள் அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் பெயரால் செய்வதே அவலமாகும். அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் பெயரால் ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமை கொலை செய்கின்றார். அல்லாஹ்வோ அகில உலகங்களுக்கும் இறைவனாக உள்ளான். அவன் அருளாளனும், மேன்மேலும் கருணை காட்டுபவனுமாவான். அவனது தூதரோ அகில உலகங்களுக்கும் ஓர் அருட்கொடை ஆவார்கள். அவர்களின் பெயரில் அநீதியும் அக்கிரமமும் செய்து ஆதரவற்றவர்கள், பெண்கள், குழந்தைகள் மற்றும் அப்பாவிகளை அவர்களின் வீடுகளிலிருந்து வெளியேற்றுகின்றனர். அவர்களை பசி, பட்டினிக்கு ஆளாகும்படி செய்கின்றனர்; அவர்கள் கொலை செய்யப்படுகின்றனர். அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் பெயரில் இவை அனைத்தையும் மிகவும் துணிவுடனும் வெட்கமின்றியும் அவர்கள் செய்கின்றனர். ஒரு அப்பாவி முஸ்லிமை வேண்டுமென்றே கொலை செய்வது ஒருவரை நரகத்திற்குக் கொண்டு செல்லும். எந்த அப்பாவியையும் கொன்று விட்டு நீங்கள் நரக நெருப்பிலிருந்து தப்பிக்கவே முடியாது என்று அல்லாஹ் கூறுகின்றான்.

ஆனால், இந்த மார்க்க குத்தகைக்காரர்கள் மற்றும் சுயநலக்காரர்களான தலைவர்கள் பாமர மற்றும் சாதாரண முஸ்லிம்களுக்கு சொர்க்கத்தின் ஆசை காட்டி அந்தப் பணிகளில் அவர்களை ஈடுபடுத்துகின்றனர். இஸ்லாம் என்றாலே அநீதி அக்கிரமம் என்று முஸ்லிம் அல்லாத உலகம் எண்ணும் அளவிற்கு இவர்கள் இஸ்லாத்தை அவமானப்படுத்தி விட்டனர். ஆயினும், ஒரு விஷயத்தில் இந்த பெயர் தாங்கி முஸ்லிம்கள், தலைவர்கள் மற்றும் அவர்களது ஆலிம்கள் பரஸ்பரம் தங்களுக்குள் ஒன்று கூடி ஒருவருக்கொருவர் உதவி ஒத்தாசை செய்வதாகக் கூறுகின்றனர். ஆனால், அந்த விஷயத்தை அல்லாஹ்வும், அவனது தூதரும் தடை செய்துள்ளார்கள்.

அல்லாஹ், தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: முஸ்லிம்களின் உள்ளங்கள் சிதறி விடும்போது, قُلُوبُهُمْ شَتّٰى என்ற நிலையில் ஆகி விடும்போது, முஸ்லிம்கள் ஒருவர் மற்றவரின் கழுத்தை வெட்டும்போது முஸ்லிம்கள் பெயர் தாங்கி ஆலிம்களிடம் நேர்வழி உள்ளது என்று கருதி அவர்களிடம் செல்வர். ஆனால், அந்த ஆலிம்களோ அல்லாஹ்விடமிருந்து விலக்கக்கூடிய பணிகளில் மும்முரமாக இருப்பர். இன்னும் சொல்வதென்றால், சாதாரண மக்களின் நிலையை விட மோசமான நிலையாக அவர்களின் நிலை இருக்கும். عُلَمَآؤُهُمْ شَرٌّ مَنْ تَحْتَ اَدِيْمِ السَّمَآءِ என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அதாவது, அவர்களின் ஆலிம்கள் வானத்தின் கீழ் வசிக்கும் படைப்பினங்களில் கேடுகெட்ட படைப்பினங்களாக இருப்பர். (அல்ஜாமிவு லி ஷுஅபில் ஈமான். லிபைஹகி தொகுதி 3 பக்கம் 317-318 ஹதீஸ் 1763 பைரூத்திலுள்ள அர்ருஷ்து அச்சகத்தில் 2004 -ல் அச்சிடப்பட்டது) ஏனென்றால், அவர்கள் குழப்பம் விளைவிக்கக் கூடியவர்களாக இருப்பர். அவர்களிடமிருந்தே குழப்பம் தோன்றும்.

இன்று நாம் ஆலிம்களில் பெரும்பாலாரிடம் இதே நிலையைத்தான் காண்கின்றோம். நெருப்பை அணைப்பதற்குப் பதிலாக இவர்கள் நெருப்பை மூட்டுகின்றனர். எனவே, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இந்த நிலைமையின் வடிவத்தை வரைந்து காட்டியுள்ளார்கள். இந்நிலையைக் கண்டு இஸ்லாத்தின் மீது வேதனை கொண்டுள்ள முஸ்லிம்கள் ஒருபோதும் அவநம்பிக்கை அடைந்து விடக் கூடாது என அன்னார் கூறினார்கள். அதுபோன்ற காலகட்டத்தில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் வாக்களிக்கப்பட்ட மஹ்தி தோன்றுவார். அவர் தனது எஜமானரின் முழுமையான தொண்டன் என்ற ரீதியில் முஸ்லிம்களையும், முஸ்லிம் அல்லாதவர்களையும் உண்மையான இஸ்லாமிய போதனைகளை அறியச் செய்வார். மேலும் இஸ்லாத்தின் அழகிய, ஒளிமயமான போதனைகளைக் கொண்டு உலகை ஒளிமயமாக்குவார். பின்னர் மீண்டும் அவர் உம்மத்தே வாஹிதா – ஒன்றிணைந்த சமுதாயத்தை உருவாக்குவார். ஆனால், நான் கூறியது போன்று இந்த காரணத்தினாலேயே ஆலிம்கள் அன்னாரை நிராகரிக்கின்றனர். மேலும் பொதுமக்களுக்கும், பாமர முஸ்லிம்களுக்கும் தவறான விஷயங்களைக் கூறி குழப்பத்தின் சூழலை உருவாக்க முயலுகின்றனர். மக்களின் உணர்வுகளுடன் விளையாடுகின்றனர். மேலும் இல்லாத ஒன்றை குழப்பம் விளைவிப்பதற்காக மக்களிடம் கூறுகின்றனர். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் காத்தமுன்னபிய்யீன் ஆவார்கள். இது ஒவ்வொரு முஸ்லிமின் கொள்கையாகும். அதில் நம்பிக்கை கொள்ளாத வரை ஒருவரின் ஈமான் முழுமையானதாக இருக்க முடியாது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் ஷரீஅத் முழுமை பெற்று விட்டது. ஆனால், இந்த குழப்பவாதிகளான ஆலிம்கள் பொதுமக்களின் உணர்வுகளைத் தூண்டி விடுகின்றனர். கத்மே நுபுவ்வத் கொள்கையில் அஹ்மதிகள் நம்பிக்கை கொள்வதில்லை என்று கூறுகின்றனர். இதற்கு நாம் இன்னாலில்லாஹ்... ஓதியவாறு 'லஃனத்துல்லாஹி அலல் காதிபீன் – பொய்யர்களின் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாவதாக' என்று கூறுவதைத் தவிர வேறொன்றும் சொல்வதற்கில்லை. எவர் அஹ்மதியாக தன்னைக் கூறிக் கொண்டு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை காத்தமுன்னபிய்யீன் என நம்பிக்கை கொள்வதில்லையோ அவர் தீயவரும், கட்டுப்படாதவரும், இஸ்லாத்தின் வட்டத்தை விட்டு வெளியேறியவரும் ஆவார்.

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்திற்கு அதுபோன்ற நபருடன் எந்த சம்பந்தமுமில்லை. ஆயினும், ஒரு விஷயம் உறுதியானதாகும். அது என்னவென்றால், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் காத்தமுன்னபிய்யீன் என்பதற்கு என்ன பொருள் கொடுத்தார்களோ அதே பொருளைத்தான் அஹ்மதிகளும் கொடுக்கின்றனர். அதனை அல்லாஹ் திருக்குர்ஆனிலும் கூறியுள்ளான். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை பின்பற்றாத மற்றும் அவர்கள் கொண்டு வந்துள்ள ஷரீஅத்திற்கு வெளியே இருக்கின்ற எந்த நபியும் இனி வர முடியாது. அபூபக்ரே! ஒரு நபி தோன்றும் வரை நீரே இந்த உம்மத்தில் மிகச் சிறந்தவராவீர் என்று ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (கன்ஸுல் உம்மால் தொகுதி 11 பக்கம் 251. கிதாபுல் ஃபஸாயிலு திக்ரிஸ்ஸஹாபதி வ ஃபஸ்லிஹிம் ஹதீஸ் 32575 பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் 2004 -ல் அச்சிடப்பட்டது)

ஆக, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நபித்துவ வாசலை மூடிவிடவில்லை. ஆயினும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வட்டத்தை விட்டு வெளியேறி எந்த நபியும் வர முடியாது. எந்தவொரு புதிய ஷரீஅத்தும் வர முடியாது. ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களை நாம் நபியாக ஏற்றுக் கொண்டுள்ளோம் என்றால், அன்னாரை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முழுமையான தொண்டர் என்ற அடிப்படையிலேயே ஏற்றுக் கொண்டுள்ளோம். இதுவே முந்தைய ஆலிம்களின் கருத்தாகவும் இருந்தது. ஷாஹ் வலியுல்லாஹ் தெஹ்லவி தனது நூலான தஃப்ஹீமாத்தே இலாஹிய்யாவில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் என்னோடு நபித்துவம் முழுமை பெற்றது என்று கூறியதாக எழுதுகின்றார்கள். (ஷாஹ் வலியுல்லாஹ் தெஹ்லவி அவர்கள் எழுதியுள்ள தஃப்ஹீமாத்தே இலாஹிய்யா என்ற நூல் தொகுதி 2 பக்கம் 85 மக்தபா ஹைதரி லாஹூர் 1967 -ல் வெளியிடப்பட்டது) இனி ஷரீஅத்தைக் கொண்டு வருகின்ற எந்த நபியும் வரமாட்டார் என்பதே இதன் பொருளாகும். ஷரீஅத் இல்லாத நபி வர முடியும். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை காத்தமுல் அன்பியா எனக் கூறுங்கள். ஆனால் அன்னாருக்குப் பிறகு நபியில்லை எனக் கூறாதீர்கள் என்று கூறினார்கள். (அத்துர்ருல் மன்சூர் தொகுதி 5 பக்கம் 204 தஃப்ஸீர் சூரத்துல் அஹ்ஸாப் பைரூத்திலுள்ள தாருல் மஃரிஃபத் அச்சகத்தில் அச்சிடப்பட்டது)

எனவே, நாம் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களுக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தொண்டர் என்ற அடிப்படையில் மட்டுமே நபியின் அந்தஸ்தை வழங்குகிறோம். ஆலிம்கள் அவ்வப்போது இந்த உணர்ச்சிகரமான விஷயங்களைத் தூண்டி விடுகின்றனர். அஹ்மதி அல்லது அவர்களின் கூற்றின்படி காதியானி, மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களை நபியாக ஏற்றுக் கொள்கின்றனர் என்று கூறுகின்றனர். இந்த கூற்றுகள் குழப்பங்களைத் தவிர வேறொன்றுமில்லை. 90 ஆண்டு கால கத்மே நுபுவ்வத் பிரச்சனையை நாங்கள் சரி செய்து விட்டோம் என பாகிஸ்தானிய அரசாங்கம் பெருமை கொள்கின்றது. அந்த சட்டம் நிறைவேறியபோது 90 ஆண்டு காலமாக இருந்தது. தற்போது 125 ஆண்டு காலம் ஆகி விட்டது. ஆக, இவ்விஷயங்களில் பாகிஸ்தானிய ஆலிம்களும் சில அரசாங்க அதிகாரிகளும் மக்களின் உணர்வுகளைத் தூண்டி விடுகின்றனர். ஆக, இவர்களின் இந்த நிலையைப் பற்றியே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் முன்னறிவிப்பு செய்திருந்தார்கள். பாமர முஸ்லிம்கள் இந்த ஆலிம்களின் பேச்சைக் கேட்பதற்கு பகரமாக இந்த காலகட்டம் ஒரு சீர்திருத்தவாதியின் தேவைக்குரிய காலகட்டமாக உள்ளதா? இல்லையா? என்பதைப் பார்க்க வேண்டும். முஸ்லிம்களை ஒருங்கிணைந்த சமுதாயமாக ஆக்கக் கூடிய சீர்திருத்தவாதி தோன்றும் காலத்தைப் பற்றி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் முன்னறிவிப்பு செய்யவில்லையா? நிச்சயமாக, இது அதற்கான காலகட்டமாகும். அல்லாஹ் தனது வாக்குறுதியை முழுமையும் செய்து விட்டான். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பு முழுமை அடைந்து விட்டது; நிறைவேறிவிட்டது. ஆனால் இந்த ஆலிம்களோ ஏற்றுக் கொள்ளப்போவதில்லை! ஏனென்றால் இவர்களின் மேடையும் அதனைச் சார்ந்துள்ள வாழ்வாதாரமும் அவர்களின் கைகளை விட்டு பறிபோய் விடும். இவர்கள் முஸ்லிம்களைத் தூண்டி விட்டுக் கொண்டே வருவர். நான் கூறியது போன்று பாகிஸ்தானில் அந்த நாட்டு சட்டம் அஹ்மதிகளுக்கு எதிராக அவ்வப்போது மாநாடு நடத்துவதற்கும், ஊர்வலம் செல்வதற்கும், ஏசிப் பேசுவதற்கும் அவர்களுக்கு முழு சுதந்திரம் வழங்கியுள்ளது. ஆனால், இந்த தீய ஒழுக்கங்கள் மற்றும் தீய நடவடிக்கைகள் அந்த மவ்லவிகளுக்கே உரியதாகும். அதனை அவர்கள் செய்து கொள்ளட்டும். ஆனால், அஹ்மதிகள் இதுபோன்ற தீமைகளை எதிர்த்து போட்டி போடமாட்டார்கள்.

எவ்வாறிருப்பினும் 12 ரபீவுல் அவ்வல் என்ற ரீதியிலும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை கண்ணியப்படுத்துதல் மற்றும் கத்மே நுபுவ்வத் ஆகியவற்றின் பெயரில் நான்கு நாட்களுக்கு முன்பு பாகிஸ்தானிலுள்ள துல்மியால் என்ற இடத்தில் மவ்லவிகளும், குண்டர்களும் ஒன்று சேர்ந்து ஊர்வலங்கள் நடத்தினர். நமது பள்ளிவாயிலின் மீது தாக்குதல் நடத்தினர். பள்ளிவாயிலினுள் அஹ்மதிகள் இருந்தனர். அவர்களை அஹ்மதிகள் உள்ளே வரவிடவில்லை. பள்ளிவாயிலின் கதவு தாழிடப்பட்டிருந்தது. போலீஸ் கூறியதற்கிணங்க மஸ்ஜிதை பாதுகாப்போம் என்று போலீஸ் வாக்குறுதியளித்த பிறகு அஹ்மதிகள் மஸ்ஜிதின் கதவைத் திறந்தனர். ஆனால், கதவை திறந்ததும் குண்டர்கள் உள்ளே நுழைந்தனர். போலீஸ் விலகி விட்டது. பின்னர் அவர்கள் மஸ்ஜிதின் பொருட்களை எடுத்து வெளியே வீசி தீயிட்டனர். இவ்வாறு தாம் இஸ்லாத்திற்கு மாபெரும் தொண்டாற்றி விட்டதாக அவர்கள் எண்ணிக் கொண்டனர். எவ்வாறிருப்பினும், நாம் சட்டத்தை கையில் எடுக்கக் கூடாது; கையில் எடுப்பதும் இல்லை. உலகப் பொருட்களைப் பற்றிய கேள்வியைப் பொருத்தவரை நமக்கு அதைப் பற்றி எந்த கவலையும் இல்லை. அவர்கள் நமக்கு பாதிப்பை ஏற்படுத்தினர் என்றால் பரவாயில்லை ஏற்படுத்தி கொள்ளட்டும். ஆனால், நமது கொள்கை மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது முழுமையான நம்பிக்கை கொள்ளுதல் மற்றும் ஏகத்துவத்தை நமது உள்ளத்தில் நிலைநாட்டுதல் போன்ற விஷயங்களைப் பொருத்தவரை நாம் நமது உயிரைக் கூட தியாகம் செய்து விடுவோம். ஆனால், இந்த கொள்கையிலிருந்து நாங்கள் விலகக் கூடியவர்கள் அல்ல. லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்ற நிலைப்பாட்டிலிருந்து நாங்கள் ஒருபோதும் பின்வாங்க மாட்டோம் என்றே நாம் கூறி வந்துள்ளோம். மேலும் அதற்காக தியாகங்களும் செய்து வந்துள்ளோம்.

இம்மக்கள் வெறும் சடங்கிற்காக மீலாதுந் நபி கொண்டாடுகின்றனர். சம்பிரதாயத்திற்காக ஒன்று கூடி சொற்பொழிவு நிகழ்த்துகின்றனர். பாகிஸ்தானில் நடைபெறும் அந்த பெரும்பாலான கூட்டங்களில் அஹ்மதிகளை ஏசிப் பேசுவதைத் தவிர்த்து சொற்பொழிவில் வேறெதுவும் இடம்பெறுவதில்லை. தற்காலிகமாக வீணான மற்றும் ஏச்சுப் பேச்சுக்களைப் பேசி இஸ்லாத்திற்கு அளப்பெரும் தொண்டாற்றி விட்டதாக அவர்கள் எண்ணுகின்றனர். ஆனால், அசல் தொண்டிற்பான பொறுப்பை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வாதம் செய்த போதே அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் ஏற்றுக் கொண்டது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: நான் ஏகத்துவம் மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கண்ணியத்தை நிலைநாட்டவே வந்துள்ளேன். இஸ்லாத்தின் மறுமலர்ச்சி தன் மூலமாகவே நடைபெறும் என்றும் அன்னார் கூறினார்கள். பின்னர் இரண்டாவது கிலாஃபத் காலகட்டத்தில் ஒருமுறை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு எதிராக முஸ்லிம் அல்லாதவர்கள் பத்திரிகை மற்றும் செய்தித்தாள்களில் வீணான ஏச்சுப் பேச்சுக்களை எழுதி வந்தனர். மிகவும் அசுத்தமான வார்த்தைகளைப் பயன்படுத்தி கட்டுரைகள் எழுதி வந்தனர். அப்போது ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் பெரிய அளவில் இந்தியா முழுவதும் சீரத்துந் நபி கூட்டங்களை நடத்தினார்கள். இப்போது கருத்து வேறுபாடுகளை மறந்து அனைவரும் ஒன்று கூடி இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கண்ணியத்தைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள் என அஹ்மதிகள், ஏனைய முஸ்லிம்களை நோக்கி கூறினார்கள். மாபெரும் அளவில் அதனை அன்னார் தொடங்கி வைத்தார்கள். இன்னும் சொல்லப்போனால், கண்ணியத்திற்குரிய முஸ்லிம் அல்லாதவர்களுக்கு கூட அன்னார் அழைப்பு விடுத்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது முழுமையான நம்பிக்கை கொள்ள வேண்டும். மேலும், அன்னாரின் கண்ணியத்தைப் பாதுகாக்க முயல வேண்டும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கருணை என்பது முழு உலகின் மீதும் உள்ளது. அன்னார் அகில உலகங்களுக்கும் ஓர் அருட்கொடை ஆவார்கள். எனவே, கண்ணியத்திற்குரிய முஸ்லிம் அல்லாத நண்பர்களும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றைப் பேச வேண்டும் என்றும் கூறினார்கள். அந்த அடிப்படையில் ஏராளமான கல்வியறிவு படைத்த நபர்கள் (அதில் இந்துக்களும் அடங்குவர்.) அந்தக் கூட்டத்திற்கு வருகை தந்து தமது கட்டுரையைப் படித்தனர்.

1928 –ல் காதியானில் முதல் ஜல்ஸா நடைபெற்றது. அதில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை புகழ்ந்து எழுதப்பட்ட இந்து மத கவிஞர்களின் இரண்டு பாடல்களும் படிக்கப்பட்டது. (தாரீகே அஹ்மதிய்யத் தொகுதி 5 பக்கம் 43) ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் வழிகாட்டுதலுக்கேற்ப முழு இந்தியாவிலும் நான் கூறியது போன்று மாநாடுகள் நடைபெற்றன. கொள்கை அளவில் கருத்து வேறுபாடுகள் இருந்த போதிலும் அக்காலத்தில் ஆலிம்கள் உட்பட பல அஹ்மதி அல்லாத முஸ்லிம்களும் கலந்து கொண்டனர். அவர்களில் எதிர்ப்பு தெரிவிக்கக் கூடியவர்களும் இருந்தனர். ஆனால், அவர்களில் பலர் அந்த திட்டத்தை, முயற்சியை வெற்றிகரமாக ஆக்கினார்கள். அதன்படி பத்திரிகைகளில் பரபரப்பாகப் பேசப்பட்டது. செய்திகளும் வெளி வந்தன.

கோரக்பூரிலிருந்து வெளிவரும் மஷ்ரிக் என்ற பத்திரிகையில் 1928 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 21 ஆம் தேதி இவ்வாறு எழுதியது. இந்தியாவில் இந்த வரலாற்றை எப்பொழுதும் உயிரோட்டமாக இருக்கும். ஏனென்றால், இந்த மாநாட்டில் உயர்ந்த அந்தஸ்து படைத்த மற்றும் ஈருலக தலைவருமான ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களை முஸ்லிம்களின் அனைத்துப் பிரிவுகளும் ஒன்றிணைந்து ஏதாவதொரு வகையில் புகழ்ந்தது. முதலிடத்தில் நமது நகரம் இருக்க வேண்டும் என ஒவ்வொரு நகரமும் போட்டி போட்டன. எந்த நபர்கள் அந்த சந்தர்ப்பங்களில் பிரிவினை மற்றும் குழப்பம் செய்யும் வகையில் சுவரொட்டிகளில் எழுதினார்களோ மற்றும் சொற்பொழிவுகளை எழுதி எங்களுக்கு (அதாவது பத்திரிகைக்கு) அனுப்பி வைத்தனரோ அவர்கள் மிகவும் மூடர்கள். சிலர் இருக்கின்றார்கள். அவர்களுக்கு எதிர்ப்பு தெரிவித்தே ஆக வேண்டும்.

அத்தகைய நபர்களைப் பற்றி இந்த பத்திரிகையில் எழுதக்கூடியவர் கூறுகின்றார்: அவர்கள் மிகவும் மூடர்கள் ஆவர். எமது கொள்கையை அவர்கள் அறிந்திருக்கவில்லை. எமது கொள்கை என்னவென்றால், எவர் லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்ற கொள்கையின் மீது நம்பிக்கை கொள்வாரோ அவர் இரட்சிப்பிற்குரியவராவார். எவ்வாறிருப்பினும் ஜூன் 17 ஆம் தேதி நடைபெற்ற மாநாடு வெற்றிகரமாக நடந்து முடிந்ததன் காரணமாக நாங்கள் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் இமாம் ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது அவர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். ஷியாக்களும், சுன்னத் ஜமாஅத்தைச் சார்ந்தவர்களும், காதியானிகளும் இதேபோன்று ஆண்டில் இரண்டு அல்லது நான்கு முறை ஓரிடத்தில் ஒன்று கூடி வந்தால் இந்த நாட்டில் எந்த சக்தியும் இஸ்லாத்திற்கு எதிராக செயல்பட முடியாது.

(தாரீகே அஹ்மதிய்யத் தொகுதி 5, பக்கம் 37,38)

அடுத்து சுல்தான் என்ற ஒரு பெங்காளி பத்திரிகை – கல்கத்தாவிலிருந்து வெளி வந்த பத்திரிகையாகும். அது எழுதுகின்றது: அஹ்மதிய்யா ஜமாஅத் ஜூன் 17 ஆம் தேதி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறை எடுத்துரைப்பதற்காக இந்தியா முழுவதும் மாநாடுகளை நடத்தியது. ஏறக்குறைய எல்லா இடங்களிலும் மாநாடு வெற்றிகரமாக நடந்து முடிந்ததாக நமக்கு தபால் வந்துள்ளது. இந்தப் பணியில் இதற்கு முன்னர் ஒருபோதும் கிடைத்திராத வெற்றி அஹ்மதிகளுக்கு தற்போது கிடைத்துள்ளது என்பது உண்மையாகும். இதிலிருந்து அஹ்மதிய்யா ஜமாஅத் அனுதினமும் வலிமை அடைந்து வருகின்றது என்பதும், மக்களின் உள்ளங்களில் இடம் பிடித்து வருகின்றது என்பதும் நமக்கு தெரிய வருகிறது. நாங்களும் அவர்களின் இந்த ஆற்றலை ஒப்புக் கொள்கிறோம். மேலும், அவர்கள் வெற்றி பெற வேண்டும் என்று ஆசைப்படுகின்றோம்.

(தாரீகே அஹ்மதிய்யத் தொகுதி 5, பக்கம் 37,38)

இவ்வாறு அந்த சமயத்தில் பத்திரிகைகளும் எழுதின. இவ்வாறு பல அந்நியர்களும் எழுதினர். நமக்கு ஒத்துழைப்பும் வழங்கினர். ஏனென்றால், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கண்ணியத்தை நிலைநாட்ட வேண்டிய விஷயமாக அது இருந்தது. அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு எவரிடமிருந்தும் பாராட்டுப் பத்திரம் பெற வேண்டிய அவசியமில்லை. இஸ்லாமிய எதிரிகள் மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை எள்ளி நகையாடிய நபர்களுக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அந்தஸ்து என்னவென்பதை அறியச் செய்வதற்காகவே ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி)அவர்கள் இதுபோன்ற மாநாடுகளை நடத்தினார்கள். மேலும் முஸ்லிம்கள் அனைவரும் ஒற்றுமையாக உள்ளனர் என்பதையும் வெளிப்படுத்திக் காட்டினார்கள். காதியானில் சில இந்துக்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பற்றி சொற்பொழிவு நிகழ்த்தினர். அல் ஃபஸ்ல் பத்திரிகை அந்த காலகட்டத்தில் காத்தமுன்னபிய்யீன் என்ற சிறப்பு மலர் ஒன்றையும் வெளியிட்டது. அதன் பிறகு அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்ச்சியாக சீரத்துந்நபி கூட்டங்களை நடத்தி வருகின்றது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் 4, 5 திட்டங்களை வழங்கி இருந்தார்கள். அதில் ஒன்று என்னவென்றால், ரபீவுல் அவ்வல் 12 ஆம் தேதி மட்டும் சீரத்துந் நபிக் கூட்டத்தை நடத்தி விட்டு இருந்து விடுவதற்குப் பகரமாக முழு வருடமும் ஜல்ஸாவோ இதனை முடித்து விடாமல் முழு வருடமும் இந்த சீரத்துந்நபி கூட்டம் நடத்தப்பட வேண்டும் எனவும் கூறியிருந்தார்கள்.

(தாரீகே அஹ்மதிய்யத் தொகுதி 5, பக்கம் 31)

எப்படியிருப்பினும், இது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வரலாறு ஆகும். இந்த கூட்டம் தற்போது நடைபெறுகிறது. அல்லாஹ்வின் அருளால் உலகின் 208 நாடுகளில் எங்கெல்லாம் ஜமாஅத் நிறுவப்பட்டுள்ளதோ அங்கு இந்த கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. கத்மே நுபுவ்வத்தைப் பற்றிய சரியான அறிவு பெற்ற மக்கள் அஹ்மதிகளேயாவர். அதில் நிலைநிற்பவர்களும் அஹ்மதிகளாகவே இருப்பர் – இன்ஷா அல்லாஹ். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சரியான அந்தஸ்தை உலகம் அடையாளம் காணும்படி அஹ்மதிகள் செய்து வருகின்றனர். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்கு இவ்விஷயத்தைக் கற்றுத் தந்ததன் விளைவாகவே நாம் இந்த பணிகளைச் செய்து வருகிறோம். அதாவது, இறைவனை சென்றடைய வேண்டும் என்றால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை நீங்கள் பின்பற்ற வேண்டும். அவர்களே இரட்சிப்பிற்குரிய வழிப்பாக உள்ளார்கள். அன்னாரை தவிர்த்து வேறெந்த வழியும் இல்லை. அவரே அனைத்தும்; நானோ ஒன்றுமற்றவன் (காதியான்கே ஆரியே அவ்ர் ஹம். ரூஹானி கஸாயின் தொகுதி 20 பக்கம் 458 ) என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள். அன்னார் ஒருபோதும் தன்னை உயர்ந்தவராகக் கூறவில்லை. எப்பொழுதும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மேன்மையையே எடுத்துரைத்துள்ளார்கள்.

அடுத்து, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் காத்தமுன்னபிய்யீன் என நாம் நம்பிக்கை கொள்வதில்லை என்ற குற்றச்சாட்டிற்கு பதிலளித்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:

நாங்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை காத்தமுன்னபிய்யீன் என ஏற்றுக் கொள்வதில்லை என்று என் மீதும் எனது ஜமாஅத்தினர் மீதும் பழிசுமத்தப் –படுகின்றது. இது மாபெரும் இட்டுக்கட்டு ஆகும். நாங்கள் எந்த அளவுக்கு உறுதியான நம்பிக்கை ஞானம் மற்றும் அகப்பார்வையுடன் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை காத்தமுன்னபிய்யீன் என நம்புகின்றோமோ அதில் இலட்சத்தில் ஒரு பங்கு கூட மற்றவர்கள் நம்புவதில்லை. மேலும் அவர்களுக்கு அதற்குரிய அந்தஸ்தும் கிடைத்திருக்கவில்லை. ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா என அன்னாரை ஒப்புக் கொள்வதில் அடங்கியுள்ள இரகசியம், ஞானத்தை அவர்களால் உணரவே முடியவில்லை. அவர்கள் தமது மூதாதையர்களிடமிருந்து ஒரு சொல்லை செவியுற்றுள்ளனர் அவ்வளவுதான். ஆனால், அவர்கள் அதன் உண்மையை அறியாதவர்களாக உள்ளனர். கத்மே நுபுவ்வத் என்றால் என்ன? அதன் மீது நம்பிக்கை கொள்வதன் பொருள் என்ன? என்பதையும் அவர்கள் அறிவதில்லை.

ஆனால், நாங்கள் நிறைவான அகப்பார்வையுடன் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை காத்தமுல் அன்பியா என நம்பிக்கை கொள்கின்றோம். இதனை அல்லாஹ் நன்கறிந்தவன் ஆவான். அல்லாஹ் கத்மே நுபுவ்வத்தின் உண்மையை எந்த அளவுக்கு நமக்கு கற்றுத் தந்துள்ளான் என்றால் அவன் நமக்கு வழங்கிய ஞானம் எனும் பானத்தின் மூலமாக ஒரு சிறப்பான இன்பத்தை நாங்கள் பெறுகின்றோம். அந்த நீரூற்றிலிருந்து தாகத்தை தணித்துக் கொண்டவர்களைத் தவிர வேறெவராலும் அதனை கற்பனை செய்து கூட பார்க்க முடியாது. (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 342; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

ஆக, அவர்கள் நம்மை கத்மே நுபுவ்வத்தை நிராகரிப்பவர்களாகக் கருதுகின்றவர்கள் சுயமே குருடர்களாக உள்ளனர். அவர்களின் உள்ளம் உயிரற்றதாகும். வெறும் முழக்கமிடுவது, குழப்பம் விளைவிப்பது மற்றும் அடித்து உதைத்து வன்முறையில் ஈடுபடுவதை தவிர்த்து அவர்களிடம் வேறெந்த விஷயங்களும் இல்லை. காத்தமுல் அன்பியா முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தனது உம்மத்திற்காக செய்த துஆவில் அஹ்மதிய்யா ஜமாஅத்தே பங்கு பெற்று வருகின்றது என்பதற்கு இஸ்லாத்தின் தூதுச் செய்தியை இன்று அஹ்மதிய்யா ஜமாஅத் உலகில் பரப்பி வருவது போதுமான சாட்சியாக இல்லையா?

அடுத்து, கத்மே நுபுவ்வத்தின் உண்மையை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

அல்லாஹ் நமக்கு நம்பிக்கையாளர்களில் தலைசிறந்த, இறை ஞானம் பெற்றவர்களில் தலைசிறந்த நபியை வழங்கியுள்ளான். அதேபோன்று வேதங்களில் மிகச் சிறந்த வேதத்தை அல்லாஹ் அன்னாருக்கு வழங்கியுள்ளான். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் காத்தமுன்னபிய்யீனாக உள்ளார்கள். அன்னார் மீது நபித்துவம் முற்றுப் பெற்று விட்டது. ஒருவர் மற்றவரது கழுத்தை நெரித்து கதையை முடித்து விடுவதுபோன்று அன்னார் நபித்துவத்தை முடித்து விடவில்லை. அவ்வாறு முற்றுப் பெறச் செய்வது பெருமைக்குரியதல்ல. மாறாக, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் நபித்துவம் முற்றுப் பெற்றது என்பதன் பொருள் இயற்கையாகவே நபித்துவத்தின் சிறப்புகள் அன்னாரிடம் முழுமை பெற்று விட்டது. ஆதம் நபி முதல் மஸீஹ் இப்னு மர்யம் வரை வந்த நபிமார்களுக்கு பலதரப்பட்ட சிறப்புகள் வழங்கப்பட்டன. ஒருவருக்கு ஒரு சிறப்பும், வேறொருவருக்கு வேறொரு சிறப்பும் வழங்கப்பட்டது. ஆனால், அவை அனைத்தும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் ஒன்றிணைக்கப்பட்டது. அதன் விளைவாக அன்னார் காத்தமுன்னபிய்யீன் ஆக ஆனார்கள். அதேபோன்று பல்வேறு வேதங்களில் நிலவி வந்த சிறப்பான போதனைகளும் இறை ஞானங்கள் அனைத்தும் திருக்குர்ஆனின் மூலமாக முழுமை பெற்று விட்டன. திருக்குர்ஆன் காத்தமுல் குதுப் – அதாவது வேதங்களில் தலைசிறந்த வேதமாகத் திகழ்கிறது. (மல்∴பூஸாத் தொகுதி 1, பக்கம் 341-342; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

அடுத்து, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர்ந்த அந்தஸ்தை எடுத்துரைத்தவாறு என்றென்றும் உயிருள்ள தூதர் முஹம்மது ரஸூலுல்லாஹ் அவர்களேயாவார்கள் என்பதைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

உலக மக்களுக்கான உயிருள்ள நபி நிரந்தரமாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மட்டுமே ஆவார்கள். இஸ்ரவேல் மக்களில் எஞ்சியிருக்கும் யூதர்கள் அல்லது மஸீஹை இறைவா! இறைவா! என அழைக்கும் கிறித்தவர்களில் அடையாளங்களை வெளிப்படுத்துவதில் என்னுடன் போட்டி போடுபவர் எவரும் உள்ளனரா? நான் சவால் விடுத்துக் கூறுகிறேன். ஒருவர் கூட கிடையாது. இது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அற்புதத்தை வெளிப்படுத்தும் ஆற்றலுக்கான தெளிவான சான்றாகும். ஏனெனில் நபியை ஏற்றுக் கொண்டு அவரை பின்பற்றுபவரின் கரங்களினால் வெளிப்படும் அற்புதம் என்பது அந்த நபர் பின்பற்றிய நபியின் அற்புதம் என்றே கூறப்படும். இது அனைவரும் ஏற்றுக் கொண்ட விஷயமாகும். எனவே, எனக்கு வழங்கப்பட்டுள்ள அசாதாரண அடையாளங்களும் எனக்கு வழங்கப்பட்டுள்ள முன்னறிவிப்புகளின் மகத்துவமிக்க அடையாளங்களும் உண்மையில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உயிருள்ள அற்புதங்கள் ஆகும். இன்று வேறெந்த நபியின் சீடருக்கும் இந்தப் பெருமை இல்லை. அதாவது, தான் பின்பற்றும் நபியின் பரிசுத்த ஆற்றலின் காரணமாக அசாதாரண அற்புதங்களை வெளிப்படுத்திக் காட்டும் தன்மை தன்னிடம் இருப்பதாக வாதம் செய்து பின்னர் அதை வெளிப்படுத்திக் காட்டக்கூடிய பெருமை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சீடரைத் தவிர்த்து வேறு எவருக்கும் இல்லை. இந்த பெருமை இஸ்லாத்திற்கு மட்டுமே உள்ளது. இதிலிருந்து இன்று முழு மனித இனத்திற்கும் உயிருள்ள நபியாக ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் மட்டுமே இருக்க முடியும் என்பது தெளிவாகின்றது. அன்னாரின் பரிசுத்தமான ஆன்மா மற்றும் பரிசுத்தமான ஆற்றலின் மூலமாக ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒரு இறை அடியார் இறை இருப்பினை வெளிப்படுத்திக் காட்டுவதற்கான ஆதாரத்தை தந்து கொண்டிருக்கிறார். (மல்∴பூஸாத் தொகுதி 1, பக்கம் 413-414; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

அடுத்து, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உயரிய அந்தஸ்து மற்றும் அன்னாரின் தாழ்மைக் குணம் மற்றும் பணிவு போன்றவற்றைப் பற்றியும் அல்லாஹ் வரை சென்றடைய அன்னார் மீதான அன்பில் திளைப்பது தொடர்பான அல்லாஹ்வின் கட்டளையைக் குறிப்பிட்டவாறும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹதீஸில் வந்துள்ளது. இறை அருளின்றி இரட்சிப்பில்லை. அல்லாஹ்வின் அருளின் காரணமாகவே மனிதனுக்கு இரட்சிப்பு கிடைக்கும். அதேபோன்று அந்த ஹதீஸிலிருந்து இந்த சம்பவமும் தெரிய வருகிறது. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! உங்களுக்கும் அதே நிலைதானா? என கேள்வி கேட்டார்கள். அதாவது, அல்லாஹ்வின் அருளின்றி எவருக்கும் இரட்சிப்பு கிடைக்காது என்று கூறினீர்களே! அப்படியென்றால் உங்களுக்கும் அதே நிலைதானா? என கேட்கப்பட்டது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தலை மீது கை வைத்து ஆம்! எனது நிலையும் அப்படித்தான் எனக் கூறினார்கள். இது அன்னாரின் முழுமையான இறை அடியாராக திகழ்ந்ததன் வெளிப்பாடாகும். அந்த தன்மை படைத்து வளர்த்து காக்கின்ற இறை பண்பை ஈர்த்துக் கொண்டிருந்தது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நாம் சுயமே அதனை பரிசோதித்துப் பார்த்துள்ளோம். பலமுறை அந்த அனுபவத்தைப் பெற்றிருக்கின்றோம். எப்பொழுதும் பார்த்து வருகின்றோம். பணிவும், தாழ்மைக் குணமும் உச்சத்தை அடையும்போது நமது ஆன்மா இறை அடிமை என்னும் தன்மையில் வழிந்தோடி விடுகின்றது. மேலும், அல்லாஹ்வின் சன்னிதானத்தை அது அடைந்து விடும்போது ஒரு வெளிச்சமும் ஒளியும் விண்ணிலிருந்து கீழே இறங்குகின்றது. பரிசுத்தமான நீர் ஓர் ஓடையிலிருந்து மற்றோர் ஓடையைச் சென்றடைவதுபோன்று அது தோன்றுகிறது. எனவே, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் நிலை எங்கு பணிவு மற்றும் தாழ்மைக் குணத்தின் உச்சத்தை அடைந்ததாக காணக் கிடைக்கின்றதோ அங்கு அதே அளவில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பரிசுத்த ஆவியின் உதவிகள் பெறப்பட்டவராகவும், ஒளிமயமாக்கப் –பட்டவராகவும் திகழ்கின்றார்கள். அதாவது, நமது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமது செயல் ரீதியிலான நிலைகளின் மூலமாக இதனை வெளிபடுத்திக் காட்டியுள்ளார்கள். அன்னாரின் பரக்கத்துகள் மற்றும் ஒளிகளின் வட்டம் எந்த அளவுக்கு பரந்ததாக உள்ளதென்றால் அதன் நிழலும் பிம்பமும் அனைத்து காலகட்டங்களிலும் வெளிபட்டு விடுகின்றது. இக்காலத்திலும் கூட இறங்குகின்ற அல்லாஹ்வின் அருளும் பரக்கத்துகளும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றுதல் மற்றும் அன்னாருக்கு கட்டுப்பட்டதன் விளைவே ஆகும்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதில் தம்மை மாய்த்துக் கொள்ளாத வரை எந்தவொரு மனிதரும் உண்மையான நன்மை செய்பவராகவோ, இறைவனின் திருப்தியைப் பெறக்கூடியவராகவோ ஆக முடியாது. மேலும், ஆன்மாவை உயர் தரமான முறையில் பரிசுத்தப்படுத்துதலின் விளைவாக மனிதனுக்கு கிடைக்கும். அருள்களும் பரக்கத்துகளும் இறைஞானங்களும் மற்றும் ஆன்மீகக் காட்சிகளும் அன்னாரைப் பின்பற்றாமல் கிடைக்கவே முடியாது.

இதற்குரிய ஆதாரம் நமக்கு அல்லாஹ்வின் வேதத்திலிருந்தே கிடைக்கின்றது. அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

قُلْ إِنْ كُنْتُمْ تُحِبُّوْنَ اللّٰهَ فَاتَّبِعُوْنِيْ يُحْبِبْكُمُ اللّٰهُ – நீங்கள் அல்லாஹ்வின் நேசத்தை விரும்பினால் என்னைப் பின்பற்றுங்கள் (மல்∴பூஸாத் தொகுதி 1, பக்கம் 203-204; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) நீங்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றினால் மட்டுமே உங்களுக்கு அல்லாஹ்வின் நேசம் கிடைக்கும் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மூலமாகவே அல்லாஹ் அறிவிக்கச் செய்தான்.

அடுத்து, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது வருகை மற்றும் திருக்குர்ஆன் இறக்கப்பட்டதற்கான காரணங்களை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் இதனை இதற்கு முன்பும் பலமுறை எடுத்துரைத்துள்ளேன். இப்போது மீண்டும் எடுத்துரைப்பது நன்மையான காரியமே ஆகும். அல்லாஹ் நபிமார்களை அனுப்புகின்றான். கடைசியாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை உலகின் நேர்வழிக்காக அனுப்பினான். அதன் நோக்கம்தான் என்ன? அடுத்து, திருக்குர்ஆனை வழங்கினான். அதன் நோக்கம்தான் என்ன? பணி செய்கின்ற ஒவ்வொருவருக்கும் ஏதாவதொரு நோக்கம் இருக்கும். திருக்குர்ஆனை அருளியதற்கும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை அனுப்பியதற்கும் அல்லாஹ்வுக்கு எந்த நோக்கமும் இல்லை எனக் கருதுவது மாபெரும் அவமரியாதையும் அநாகரீகமும் ஆகும். ஏனென்றால் அந்நிலையில் ஒரு வீணான காரியத்தை இறைவன் செய்து விட்டதாக மனிதன் கருதுபவனாக இருப்பான். அல்லாஹ் மிகத் தூய்மையானவனும், கம்பீரமிக்கவனும் ஆவான்.

நினைவில் கொள்ளுங்கள். அல்லாஹ், கண்ணியமிக்க வேதத்தையும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களையும் அனுப்பி வைத்து உலகிற்கு கியாமத் வரை மகத்துவமிக்க அருளின் அடையாளத்தைக் காட்ட விரும்பியுள்ளான். அல்லாஹ் கூறுகின்றான்:

وَمَاۤ اَرْسَلْنٰكَ اِلَّا رَحْمَةً لِّلْعٰلَمِيْنَ நாம் உம்மை அகில உலகத்திற்கும் ஓர் அருட்கொடையாக அனுப்பியுள்ளோம். **(21:108)** அதேபோன்று திருக்குர்அன் அருளியதன் நோக்கமாக هُدًى لِّلْمُتَّقِيْنَ என அல்லாஹ் கூறுகின்றான். இறையச்சம் உடையவர்களுக்கு இது நேர்வழி காட்டக் கூடியதாகும். இவை எப்படிப்பட்ட மகத்துவமிக்க நோக்கங்கள் என்றால் அதற்கு நிகர் எதுவுமில்லை. (மல்∴பூஸாத் தொகுதி 1, பக்கம் 340; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

அடுத்து, திருக்குர்ஆனில் பல்வேறு வகையான வாதங்களின் சிறப்புகள் ஒன்றிணைந்துள்ளன என்பதையும், அது வெறும் கட்டுக்கதையல்ல என்பதையும் விளக்குகின்றார்கள். மேலும் திருக்குர்ஆன் ஒரு நம்பிக்கையாளர் செயல்படுவதற்கு தகுந்த வேதமாகும் என்பதையும் விளக்கியவாறு அன்னார் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:

பல்வேறு நபிமார்களிடம் இருந்த பலதரப்பட்ட சிறப்புகள் அனைத்தையும் அல்லாஹ் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் ஒன்றிணைக்க விரும்பினான். அதேபோன்று பல்வேறு வேதங்களில் இருந்த பலதரப்பட்ட சிறப்புகளையும், மேன்மைகளையும் அல்லாஹ் திருக்குர்ஆனில் ஒன்றிணைத்து விட்டான். அதேபோன்று பல்வேறு சமுதாயங்களில் இருந்த பலதரப்பட்ட சிறப்புகளை இந்த உம்மத்தில் ஒன்றிணைத்து விட்டான்.

நாம் இந்த சிறப்புகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என அல்லாஹ் விரும்புகின்றான். அவன் எப்படிப்பட்ட மகத்துவமிக்க சிறப்புகளை நமக்கு வழங்க

விரும்பியுள்ளானோ அதற்குரிய ஆற்றல்களையும் அல்லாஹ் நமக்கு வழங்கியுள்ளான். ஏனென்றால், அதற்கேற்ற ஆற்றல் வழங்கப்படவில்லை என்றால் நாம் எந்நிலையிலும் அந்த சிறப்புகளைப் பெறவே முடியாது. அதற்கு உதாரணம் இதுவாகும். ஒரு மனிதன் ஒரு கூட்டத்திற்கு விருந்தளிக்கின்றான் என்றால் அந்தக் கூட்டத்தினரின் எண்ணிக்கைக்கேற்ப உணவு சமைப்பது அவசியமாகும். மேலும், அதற்கேற்ற ஓர் இடமும் இருக்க வேண்டும். அதாவது விருந்து பரிமாற இடமும் இருக்க வேண்டும். ஆயிரம் நபருக்கு விருந்திற்கான அழைப்பு கொடுத்து விட்டு அவர்கள் அமர்ந்து உணவு உண்பதற்கு ஒரு சிறிய குடிசையைக் கட்டுவது போதுமானதாக இருக்க முடியாது. மாறாக, விருந்தினர் அமர்ந்து உணவு உண்பதற்கான இடத்திற்கான ஏற்பாட்டையும் விருந்தளிப்பவர் செய்வார்.

அதேபோன்று அல்லாஹ்வின் வேதமான திருக்குர்ஆனும் கூட ஒரு விருந்தாகும். அந்த விருந்திற்காக முழு உலகமும் அழைக்கப்பட்டுள்ளது. இந்த வேதம், இந்த ஷரீஅத் முழு உலகத்திற்குரியதாகும். இந்த விருந்திற்காக இறைவன் ஆயத்தப்படுத்தியுள்ள இடம் என்பது மனித ஆற்றல்கள் ஆகும். மனிதனிடம் உள்ள ஆற்றல்கள் ஒரு வகையில் விருந்து உண்பதற்கான இடமாக ஆக்கப்பட்டுள்ளது. எனவே, திருக்குர்ஆனின் இந்தக் கட்டளையின்படி எங்களால் செயல்பட முடியாது. அது எங்களுக்கு கடினமாகும் எனக் கூறுவது தவறாகும். திருக்குர்ஆனின்படி செயல்படக்கூடிய அளவிற்கான ஆற்றல்களை அல்லாஹ் மனிதனுக்கு வழங்கியுள்ளான்.

இந்த உம்மத்தில் உள்ளவர்களுக்கு அந்த ஆற்றல் வழங்கப்பட்டுள்ளது. அதாவது, உண்மையான முஸ்லிம்களில் தூய உள்ளத்துடன் தமது ஈமானில் நிலைபெற்றிருப்பவர்களுக்கு அந்த ஆற்றல் வழங்கப்பட்டுள்ளது. ஆற்றல்கள் இன்றி எந்தவொரு பணியும் நடைபெறவே முடியாது. காளை மாடு, நாய் அல்லது வேறொரு விலங்கிற்கு முன் திருக்குர்ஆனின் போதனைகளை எடுத்து வைத்தால் அதனை அவற்றால் புரிந்து கொள்ள முடியாது. ஏனென்றால், திருக்குர்ஆனின் போதனைகளை உள்வாங்கக் கூடிய ஆற்றல்கள் அவைகளிடம் இல்லை. ஆனால் நாம் பயன் பெறும் வகையிலான ஆற்றல்களை அல்லாஹ் நமக்கு வழங்கியுள்ளான். (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 340-341; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) அதற்கான ஆற்றல் இல்லை. என்னால் இந்த போதனையின்படி செயல்பட இயலாது என ஒருவர் தன்னை விலங்காகக் கருதக்கூடாது. அல்லாஹ் ஓர் உண்மையான நம்பிக்கையாளருக்கு அந்த ஆற்றல்களை வழங்கியுள்ளான். அந்த ஆற்றல்களை வெளிக் கொண்டு வருவது மனிதனின் பணியாகும். அவன் திருக்குர்ஆனின் போதனையின்படி செயல்பட வேண்டும்.

முஸ்லிம்களின் நடவடிக்கைகள் என்னவென்பது பற்றியும், இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீதான தன்மான உணர்வை வெளிப்படுத்தியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு அறிவுரை செய்கின்றார்கள். மேலும் இக்காலத்தில் மிகப்பெரிய இறை வணக்கம் என்னவென்றும் கூறுகின்றார்கள். அன்னார் கூறுகின்றார்கள்:

இஸ்லாத்தைப் பற்றி இக்காலத்தில் மனிதர்களுக்கிடையே ஏற்பட்டுள்ள குழப்பத்தை அகற்றுவதில் முஸ்லிம்கள் பங்கேற்க வேண்டும். இதுவே பெரிய இறை வணக்கம் ஆகும். குழப்பத்தை அகற்றுவதற்கு ஒவ்வொரு முஸ்லிமும் ஏதாவதொரு வகையில் தனது பங்களிப்பை வழங்க வேண்டும். தீமைகளும், ஏளனங்களும் பரவிக் கிடக்கின்றன. தனது சொற்பொழிவு மற்றும் அறிவின் மூலமாகவும் அவருக்கு வழங்கப்பட்ட அனைத்து ஆற்றல்களைக் கொண்டும் கலப்பற்ற தன்மையுடன் முயற்சி செய்து குழப்பங்களை உலகிலிருந்து அகற்ற வேண்டும்.

இவ்வுலகிலேயே ஒருவருக்கு எல்லா வகையான சுகமும், இன்பமும் கிடைத்து விடுவதால் என்ன பயன்? உலகில் பெரிய அந்தஸ்து கிடைத்து விடுவதால் என்ன பயன்? மறுமையின் நற்கூலியைப் பெற முயலுங்கள். அதற்கு எல்லையே கிடையாது. இறைவனுக்கு தனது ஏகத்துவத்தின் மீது இருக்கின்ற தன்மானத்தைப் போன்று ஒவ்வொரு முஸ்லிமுற்கும் அல்லாஹ்வின் ஏகத்துவத்திற்கான தன்மானம் இருக்க வேண்டும்.

சிந்தனை செய்யுங்கள். நமது நபி (ஸல்) அவர்களைப் போன்று அநீதி இழைக்கப்பட்ட நபர் எங்கே கிடைப்பார்? அன்னார் மீது அனைத்து வகையான ஏச்சுப் பேச்சுக்களும், குப்பைகளும் வீசப்பட்டன. இது முஸ்லிம்கள் மவுனமாக அமர்ந்திருக்க வேண்டிய நேரமா? இப்போது ஒருவர் எழுந்து நின்ற உண்மைக்கு சாட்சி கூறி, பொய்யரின் வாயை அடைக்கவில்லை என்றால் காஃபிர்கள் நமது நபி (ஸல்) அவர்கள் மீது வெட்கமின்றி ஆட்சேபனை செய்வதையும், மக்களை அவர்கள் வழிகெடுப்பதையும் அவர் ஆகுமானதாகக் கருதுபவராக இருப்பார் என்றால் நினைவில் கொள்ளுங்கள். அவர் நிச்சயமாக பெரிய விசாரணைக்கு உட்படுத்தப்படுவார். உங்களுள்ள அறிவையும், அறிமுகத்தையும் இந்த வழியில் செலவிடுங்கள். அதாவது உங்களுக்குள்ள மார்க்க அறிவை இந்த வழியில் செலவிடுங்கள். மக்களை இந்த துன்பத்திலிருந்து காப்பாற்றுங்கள். நீங்கள் தஜ்ஜாலை கொல்லவில்லையென்றாலும் அவன் மரணித்து விடுவான் என ஹதீஸில் வந்துள்ளது. 13 ஆம் நூற்றாண்டிலிருந்து இந்த துன்பங்கள் இறங்கத் தொடங்கின. தற்போது தஜ்ஜாலிற்கு முடிவு கட்டும் நாள் மிக அருகில் உள்ளது. இஸ்லாத்தின் ஒளியை மக்களுக்கு காட்டிக் கொடுக்க ஒரு முஸ்லிமால் எந்த அளவு முடியுமோ அந்த அளவு முயல வேண்டும். (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 394-395; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) நான் முன்னரே கூறியது போன்று அந்த ஒளியை வெளிப்படுத்திக் காட்டுவதற்காக அல்லாஹ் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை அனுப்பியுள்ளான். அன்னாரை ஏற்றுக் கொண்டு பைஅத் செய்துள்ள நாம் நற்பேறு பெற்றவர்களாவோம். அன்னாரின் பிரச்சாரத்தை முன்னெடுத்துச் செல்வது இனி நமது பணியாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பராஹீனே அஹ்மதிய்யாவில் தனது ஓர் இல்ஹாமை பற்றி குறிப்பிட்டவாறு கூறுகின்றார்கள்:

صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَّاٰلِ مُحَمَّدٍ سَيِّدِ وُلْدِ اٰدَمَ وَخَاتَمِ النَّبِيّٖنَ முஹம்மது (ஸல்) அவர்கள் மீதும் அன்னாரின் குடும்பத்தினர் மீதும் ஸலவாத் ஓதுங்கள். அவர் ஆதமின் மக்களின் தலைவரும், நபிமார்களின் தலைசிறந்தவரும் ஆவார்.

அன்னார் கூறுகின்றார்கள்: அனைத்து அருட்கொடைகளும் அந்தஸ்துகளும் அன்னார் மூலமாகவே கிடைத்துள்ளது என்பதை இந்த இல்ஹாம் சுட்டிக் காட்டுகின்றது. இது அன்னாரின் மீது அன்பு கொண்டதன் விளைவேயாகும். சுப்ஹானல்லாஹ். அன்னார் எவ்வளவு உயரிய அந்தஸ்தைப் பெற்றுள்ளார்கள். அன்னாரை நேசிப்பவர் இறை நேசராக ஆகி விடுகின்றார். அன்னாரின் தொண்டர் உலகின் எஜமானராக ஆகி விடுகின்றார்.

ہیچ محبوبے نماند ہمچو یار دلبرم
مہر و مہ را نیست قدرے در دیارِ دلبرم
آں کجا رُوئے کہ دارد ہمچو رُویش آب و تاب
واں کُجا باغے کہ مے دارد بہارِ دلبرم

ஃபார்ஸி கவிதையின் பொருள்:

எனது நேசத்திற்குரியவரைப் போன்று எவருமில்லை. அவருக்கு எதிரில் சூரியன், சந்திரனுக்கும் கூட எந்த மதிப்புமில்லை. அன்னாரைப் போன்று ஒளிமயமான முகம் வேறு எங்கு உள்ளது? எனது அன்பரைப் போன்று வசந்த காலம் படைத்த தோட்டம் எங்குள்ளது? (பராஹீனே அஹ்மதிய்யா. ரூஹானி கஸாயின் தொகுதி 1 பக்கம் 587-588 அடிக்குறிப்பு)

ஸலவாத் எந்த நோக்கத்திற்காக ஓத வேண்டும்? என்பதை விளக்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இறைவன் தனது முழுமையான பரக்கத்துகளை தனது கண்ணியத்திற்குரிய நபியின் மீது அருள வேண்டும் என்ற நோக்கத்திற்காக மட்டுமே ஸலவாத் ஓத வேண்டும். மேலும் முழு உலகத்திற்கும் அனைத்து பரக்கத்துகளின் தலையாய நீரூற்றாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை அல்லாஹ் ஆக்கி விட வேண்டும் என்பதற்காக ஓத வேண்டும். மேலும் அன்னாரது கண்ணியமும் சிறப்பும் மேன்மையும் இவ்வுலகிலும் மறுவுலகிலும் இறைவனால் வெளிப்படுத்த வேண்டும் என்பதற்காக துஆ செய்ய வேண்டும். மேலும் இந்த துஆ முழுமையான உருக்கத்துடன் செய்யப்பட வேண்டும். எவ்வாறு தனக்கு நேரிடும் துன்பத்தின் போது மனிதன் முழுமையான உருக்கத்துடன் துஆ செய்வானோ அதுபோன்று செய்ய வேண்டும். அதே போன்று ஸலவாத் ஓதியவாறு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மேன்மையான அந்தஸ்திற்காக துஆ செய்ய வேண்டும். ஒரு துன்பத்தால் நாம் சூழப்படும் போது எப்படி துஆ செய்வோமோ அப்படி செய்ய வேண்டும்.

இன்னும் சொல்லப்போனால், அதை விட அதிகமான மன்றாடல் மற்றும் கவனத்துடன் துஆ செய்தல் வேண்டும். அதில் தனக்கான எந்த பங்கும் இருத்தல் கூடாது. இதனால் எனக்கு நற்கூலி கிடைக்கும் அல்லது எனக்கு இந்த அளவு அந்தஸ்து கிடைக்கும் என்ற எண்ணம் கூடாது. மாறாக முழுமையான இறை பரக்கத்துகள் அனைத்தும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு அருளப்பட வேண்டும். அன்னாரின் கம்பீரம் இவ்வுலகிலும் மறுவுலகிலும் ஒளிமயமாகத் தென்பட வேண்டும். (மக்தூபாதே அஹ்மது தொகுதி 1 பக்கம் 523; 2008 ஆம் ஆண்டு பதிப்பு) எனவே எதிரிகள் நம்மை என்ன வேண்டுமானாலும் கூறிக் கொள்ளட்டும். நம் மீது என்ன குற்றச்சாட்டுகளைச் சுமத்த வேண்டுமோ சுமத்திக் கொள்ளட்டும். நமது உள்ளங்களில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மீதான அன்பு உள்ளது. எல்லாரையும் விட அதிகமாக நமக்கு காத்தமுன்னபிய்யீன் என்பதைப் பற்றிய ஞானம் உள்ளது. நமக்கு இவை அனைத்தையும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களே தந்துள்ளார்கள். எதிரிகளின் ஒவ்வொரு தாக்குதல் மற்றும் அநீதிகளுக்குப் பிறகும் முன்பை விட நாம் நமது ஈமானில் முன்னேறிக் கொண்டே செல்பவர்களாக இருப்போமாக! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது முன்பை விட அதிகமாக தரூது ஓதுபவராக நாம் இருப்போமாக! அதன் மூலமாக முஸ்லிம்களுக்கு பெருமானார் (ஸல்) அவர்களின் அந்தஸ்து பற்றி சரியான அறிவு கிடைக்கட்டும். வழிதவறிச் சென்று விட்ட இந்த முஸ்லிம்களும் கூட சரியான பாதையில் வரட்டும். உலகிலும் இஸ்லாத்தின் அழகிய போதனை பரவட்டும்!

★ ★ ★ ★ ★

# ஜும்ஆ பேருரை

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மீது எதிர்ப்புகளும், ஜமாஅத் மக்கள் மீது ஜமாஅத்தின் எதிரிகளின் தரப்பிலிருந்து இழைக்கப்படும் அநீதிகளும் ஒரு புதிய விஷயமல்ல. நபிமார்களின் ஜமாஅத்தில் அத்தகைய எதிர்ப்புகள் இருப்பதும் புதிய விஷயமல்ல. எல்லா ஷய்த்தான்களும் ஒன்று திரண்டு இந்த எதிர்ப்பைக் காட்டுகின்றனர். ஆலிம்களும், அவர்களின் தலைவர்களும் பொதுமக்களின் முன் வினோதமான விஷயங்களையெல்லாம் கூறி, நபிமார்கள் மற்றும் அவர்களை ஏற்றுக் கொண்டவர்களுடன் தொடர்புபடுத்தி அவற்றை கூறுகின்றனர்; அவர்களை தூண்டுகின்றனர். வெறுப்பின் நெருப்பை மூட்ட விரும்புகின்றனர்.

சிலர் இருக்கிறார்கள். அவர்கள் கூறுகின்றார்கள்: இப்போது அஹ்மதிகள் மீது அநீதி உச்சத்தைத் தொட்டு விட்டது. இப்போது நாம் கடுமைக்கு கடுமையின் மூலமே பதில் கொடுக்க வேண்டும். எவ்வளவு காலம் தான் இந்த கஷ்டங்களைச் சகித்துக் கொண்டிருப்போம்? இவ்வாறு கூறுபவர்கள் ஓரிருவராகவே இருப்பினும் சில இளைஞர்களின் மூளைகளில் அவர்கள் விஷத்தைப் பதிய வைக்க விரும்புகின்றனர். நாம் நமது கோரிக்கைகளை ஏற்கச் செய்வதற்காகவும் நமது சுதந்திரத்திற்காகவும் உலகியல் நடைமுறையைக் கடைபிடிக்க வேண்டும் என்றும் அவர்கள் கூறுகின்றனர். இவை அறியாமையின் விஷயங்களாகும். இவை அனைத்தும் முற்றிலும் தவறான சிந்தனையாகும்.

அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் வெற்றி, உதவி, முன்னேற்றம் ஆகியவை குறித்து வாக்களித்துள்ளான். ஆனால் கடுமைக்கு எதிரில் கடுமை காட்ட வேண்டாம். மாறாக, அன்பு, நேசம், துஆவின் பக்கம் கவனமூட்டுவதன் மூலம் (பதில் கொடுங்கள்). இதே விஷயத்தைத்தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு மீண்டும் மீண்டும் புரிய வைத்தார்கள். ஜமாஅத்தின் முன்னேற்றம் எதிரிகளின் அழிவு ஆகியவை துஆவின் மூலமே நடக்கவுள்ளது - இன்ஷா அல்லாஹ். எனவே உங்களது நிலைமைகளை அல்லாஹ்வின் போதனைக்கு ஏற்ப அமைத்தவாறு உங்களுக்குள் தக்வாவின் உயர் தரத்தை உருவாக்கியவாறு அல்லாஹ்வின் முன் குனியுங்கள்.

ஓரிருவர் ஜமாஅத்தின் போதனைக்கு எதிராகப் பேசினாலும் அது குழப்பம் ஏற்படுத்தக் கூடிய பேச்சே ஆகும். எதிரிகள் நமக்கு எதிராக இன்னும் அதிகமாக செயல்படுவதற்கு வாய்ப்பு அளிப்பதாகும். குறிப்பாக Whatsapp, Twitter, Facebook அல்லது வேறு வழிகளில் இந்த செய்திகள் பரவும்போது எதிரிகளுக்கு இன்னும் அதிகமாக வாய்ப்பு அளிக்கக் கூடியதாக அவை அமையும்.

நாம் இந்த போதனையின்படி தான் செயல்பட வேண்டும். இந்த வழிகாட்டுதலின்படிதான் நடக்க வேண்டும். இதனையே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு தந்துள்ளார்கள். நாம் ஏச்சுக்குப் பதில் ஏச்சும், குழப்பத்திற்கு பதில் குழப்பமும் செய்யக் கூடாது. சட்டத்தை நமது கையில் எடுக்கவும் கூடாது. நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்துவது நமது போதனையல்ல. எனவே, ஒரே வழிதான் உள்ளது. அல்லாஹ்வின் வாசலைப் பற்றிப் பிடியுங்கள். துஆவை அதன் எல்லைக்கு எடுத்துச் செல்லுங்கள்.

நம்மில் ஒவ்வொருவரும் தம்மை ஆய்வு செய்ய வேண்டும். அல்லாஹ் நம்மிடம் விரும்புகிற துஆவின் உயர் தரத்தை நாம் பெற்று விட்டோமா? உலகியல் காரணிகளில் பார்வையை வைப்பதற்குப் பதிலாக துஆ ஒப்புக் கொள்ளப்படத்தக்க, ஆன்மாவில் உருக்கம் ஏற்படுத்தத்தக்க தகுதியை நாம் பெற்று விட்டோமா? என்று பார்க்க வேண்டும். நமது பணி பொறுமை மற்றும் துஆவுடன் அல்லாஹ்வின் கையைப் பற்றியிருப்பதாகும். நம்மில் எவராவது பொறுமை இழந்தால் அவர் தனக்கே நஷ்டமிழைப்பார்.

மற்ற முஸ்லிம்களுக்கு வழிகாட்டி இல்லை. இதனால் அவர்களிடம் சீர்குலைவுகள் ஏற்படுகின்றன. தக்வாவில் இருந்து அவர்கள் தூர விலகுகின்றனர். ஆனால், நாம் அஹ்மதி முஸ்லிம்கள் ஆவோம். நமக்கு ஒரு வழிகாட்டியை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வடிவில் அல்லாஹ் வழங்கியுள்ளான். நமது ஒவ்வொரு செயலும் இஸ்லாமிய போதனைகளுக்கு ஏற்பவையாக இருக்க வேண்டும். நமது ஒவ்வொரு பேச்சும் தக்வாவை அடிப்படையாகக் கொண்டவையாக இருக்க வேண்டும். தற்காலிக உணர்வுகளிலிருந்து நாம் எப்போதும் விலக வேண்டும்.

நாம் காலத்தின் இமாம் கூறிய போதனைகள் மற்றும் அறிவுரைகளின் படி செயல்படவில்லையெனில் அந்த ஒளியிலிருந்து விலகி விடுவோம். கட்டுப்படுதலின் காரணத்தால் அல்லாஹ்விடமிருந்து அவை நமக்கு கிடைக்க வேண்டியுள்ளது. ஆகவே, நாம் முதலில் நம்மை ஆய்வு செய்ய வேண்டும். நமது தக்வாவின் தரம் உயர்ந்து நமக்கு அல்லாஹ்வின் ஒளி கண்ணுக்குத் தெரிகிறதா என்று பார்க்க வேண்டும். அல்லாஹ் விரும்பும் அளவுக்கு இவை இருந்தால் அல்லாஹ்வின் உதவி நமக்கு அருகில் உள்ளது என்று உறுதி கொள்ள வேண்டும்.

இந்த சோதனையின் காலம் நிச்சயமாக முடிவடையக் கூடிய காலமாகும். ஆனால் இதில் வேகம் ஏற்படுவதற்காக நாம் நமது தக்வாவின் தகுதியை உயர்த்திக் கொண்டே செல்வது அவசியமாகும்.

---

துல்மியால் (பாகிஸ்தான்) -ஐச் சார்ந்த மதிப்பிற்குரிய மலிக் அய்யூப் அஹ்மது சாஹிப் அவர்களது மகனான மலிக் காலிம் ஜாவீத் சாஹிப் அவர்கள் வஃபாத் ஆகி விட்டார்கள். மர்ஹூமின் நன்மைகள் எடுத்துக் கூறப்பட்டு அவருக்காக ஜனாஸா காயிப் தொழுகையும் நிறைவேற்றப்பட்டது.

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் மார்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்**
**23 டிசம்பர் 2016** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1395 -ஆம் ஆண்டு **ஃபத்ஹ்** மாதம் **23 -ஆம் தேதி** ஆற்றிய **ஜும்ஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ۔ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ۔ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ۔ اِيَّاكَ نَعْبُدُ

وَ اِيَّاكَ نَسْتَعِيْنُ۔ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ۔ صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மீது எதிர்ப்புகளும், ஜமாஅத் மக்கள் மீது ஜமாஅத்தின் எதிரிகளின் தரப்பிலிருந்து இழைக்கப்படும் அநீதிகளும் ஒரு புதிய விஷயமல்ல. நபிமார்களின் ஜமாஅத்தில் அத்தகைய எதிர்ப்புகள் இருப்பதும் புதிய விஷயமல்ல. எல்லா ஷய்த்தான்களும் ஒன்று திரண்டு இந்த எதிர்ப்பைக் காட்டுகின்றனர். ஆலிம்களும், அவர்களின் தலைவர்களும் பொதுமக்களின் முன் வினோதமான விஷயங்களையெல்லாம் கூறி, நபிமார்கள் மற்றும் அவர்களை ஏற்றுக் கொண்டவர்களுடன் தொடர்புபடுத்தி அவற்றை கூறுகின்றனர்; அவர்களை தூண்டுகின்றனர். வெறுப்பின் நெருப்பை மூட்ட விரும்புகின்றனர். அல்லாஹ் திருக்குர்ஆனில் இதனை விளக்கியவாறு தெளிவுபடுத்தி விட்டான். ஒவ்வொரு ரஸூலுக்கும் எதிர்ப்பு ஏற்படுகிறது என்றும், எந்த நபியும் எதிர்ப்பு இல்லாமல் இருக்கவில்லை என்றும் கூறி விட்டான். நபிமார்கள் ஏளனம் செய்யப்பட்டனர். ஷய்த்தான்கள் அவர்களின் பணிகளில் தடைகளை ஏற்படுத்தினர். ஜமாஅத் எதிர்கொள்கிற இப்பிரச்சனை ஒன்றும் புதிய விஷயமல்ல.

அல்லாஹ் திருக்குர்ஆனில் இதனை விளக்கியவாறு ஓரிடத்தில் கூறுகின்றான்:

وَكَذٰلِكَ جَعَلْنَا لِكُلِّ نَبِيٍّ عَدُوًّا شَيٰطِيْنَ الْاِنْسِ وَالْجِنِّ يُوْحِيْ بَعْضُهُمْ اِلٰى بَعْضٍ زُخْرُفَ الْقَوْلِ غُرُوْرًا

மனிதர்கள் மற்றும் ஷய்த்தான்களிலிருந்து தீங்கு விளைவிப்பவர்களை இவ்வாறே நாம் ஒவ்வொரு நபிக்கும் எதிரியாக்கி இருந்தோம். அவர்களுள் சிலர் மக்களிடம் தவறான கருத்துக்களைக் கூறி ஏமாற்றுவார்கள். **(6:113)** அதாவது ஏமாற்றுகிற சிந்தனைகளை மக்களின் உள்ளங்களில் இடுகிறார்கள். அல்லாஹ்வின் இக்கூற்று இன்றும் உண்மையாகும். இந்த தீங்கு விளைவிக்கும் ஆலிம்கள் மார்க்கத்தின் பெயரால் மக்களை ஏமாற்றுகின்றனர். சாதாரண மக்களை தூண்டி விடுகின்றனர். அவர்களுடன் சில தலைவர்களும் பல்வேறு இடங்களில் சேர்ந்து கொள்கின்றனர்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மற்றும் அன்னாரின் ஜமாஅத்துடன் தொடர்புபடுத்தி சில விஷயங்களை அவர்கள் கூறுகின்றனர். ஆனால் அவை அவர்களிடம் இருப்பதில்லை. அவை உண்மையுடன் சிறிதும் தொடர்பில்லாதவையாகும். அதுபோன்று பல கருத்துக்களை ஜமாஅத்தைப் பற்றி கூறுகிறார்கள் அல்லது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது எள்ளி நகையாடுகின்றனர். இவை அனைத்து விஷயங்களையும் அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறியுள்ளான். நபிமார்களுடன் இவ்வாறே நடந்து கொள்ளப்படுகிறது. பொய் அவர்கள் மீது புனையப்படுகிறது. ஏளனமும் கிண்டலும் செய்யப்படுகிறது. எனவே, ஈமானில் நிலைத்து நிற்கிற ஓர் உண்மையான அஹ்மதிக்கு எதிர்ப்பும், தொல்லை கொடுப்பதும் ஈமானை அதிகப்படுத்தவே காரணமாக அமைகின்றது. ஆனால், சிலர் இருக்கிறார்கள். அவர்கள் கூறுகின்றார்கள்: இப்போது அஹ்மதிகள் மீது அநீதி உச்சத்தைத் தொட்டு விட்டது. இப்போது நாம் கடுமைக்கு கடுமையின் மூலமே பதில் கொடுக்க வேண்டும். எவ்வளவு காலம் தான் இந்த கஷ்டங்களைச் சகித்துக் கொண்டிருப்போம்? இவ்வாறு கூறுபவர்கள் ஓரிருவராகவே இருப்பினும் சில இளைஞர்களின் மூளைகளில் இவர்கள் விஷத்தைப் பதிய வைக்க விரும்புகின்றனர். நாம் நமது கோரிக்கைகளை ஏற்கச் செய்வதற்காகவும் நமது சுதந்திரத்திற்காகவும் உலகியல் நடைமுறையைக் கடைபிடிக்க வேண்டும் என்றும் அவர்கள் கூறுகின்றனர். இவை அறியாமையின் விஷயங்களாகும். இவை அனைத்தும் முற்றிலும் தவறான சிந்தனையாகும் அல்லது இம்மக்கள் உணர்ச்சி மேலீட்டால் நமது அடிப்படை போதனை என்னவென்பதை மறந்து விட்டார்கள்.

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மிடம் என்ன எதிர்பார்க்கிறார்கள். தமது ஜமாஅத்தை இந்த கடுமைகளையும் கஷ்டங்களையும் சகித்துக் கொள்வதற்காக என்ன போதனையைச் செய்துள்ளார்கள் என்பதை அவர்கள் மறந்து விட்டனர் அல்லது அத்தகையோர் அனுதாபம் காட்டுபவர்களாக ஆகியவாறு ஜமாஅத்தில் பிரிவினையை ஏற்படுத்த முயற்சி செய்கின்றனர். ஜமாஅத் வளர வளர எதிரிகளும் பல்வேறு முறையில் தாக்குதல் தொடுக்கின்றனர். பல்வேறு வழிமுறைகள் மூலம் சோதித்துப் பார்க்கின்றனர். அதில் இது ஒரு முறையாக இருக்கலாம்.

அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் வெற்றி, உதவி, முன்னேற்றம் ஆகியவை குறித்து வாக்களித்துள்ளான். ஆனால் கடுமைக்கு எதிரில் கடுமை காட்ட வேண்டாம். மாறாக, அன்பு, நேசம், துஆவின் பக்கம் கவனமூட்டுவதன் மூலம் (பதில் கொடுங்கள்). இதே விஷயத்தைத்தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு மீண்டும் மீண்டும் புரிய வைத்தார்கள். ஜமாஅத்தின் முன்னேற்றம் எதிரிகளின் அழிவு ஆகியவை துஆவின் மூலமே நடக்கவுள்ளது – இன்ஷா அல்லாஹ். எனவே உங்களது நிலைமைகளை அல்லாஹ்வின் போதனைக்கு ஏற்ப அமைத்தவாறு உங்களுக்குள் தக்வாவின் உயர் தரத்தை உருவாக்கியவாறு அல்லாஹ்வின் முன் குனியுங்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அமைதியின் இளவரசராக ஆகி வர வேண்டியிருந்தது. அவ்வாறே வந்தார்கள். அன்னார் தம்மை ஏற்றுக் கொண்டவர்களிடம் முதல் நாளிலிருந்தே கூறி வந்தார்கள். எனது வழி எளிய வழியல்ல. இதில் பெரும் கடுமைகள் உள்ளன. இங்கு சிலவேளை உணர்வுகளைக் கொல்ல வேண்டியது வரும். உயிர் மற்றும் பொருள் நஷ்டங்களைச் சகிக்க வேண்டியது வரும் என்று கூறியிருந்தார்கள். அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத் மக்கள் இவ்வழியில் எல்லா வகையான தியாகங்களையும் செய்து கொண்டே செல்கிறார்கள். நான் கடந்த குத்பாவில் குறிப்பிட்டதுபோன்று அவர்கள் நமக்கு எழுதவே செய்கின்றனர். எதிரிகளின் தாக்குதலுக்கு நாங்கள் பயப்படப் –போவதில்லை. எமது ஈமான் முன்னரை விட உறுதியாகவே ஆகிறது என்று எழுதுகின்றனர். ஆனால் ஓரிருவர் ஜமாஅத்தின் போதனைக்கு எதிராகப் பேசினாலும் அது குழப்பம் ஏற்படுத்தக் கூடிய பேச்சே ஆகும். எதிரிகள் நமக்கு எதிராக இன்னும் அதிகமாக செயல்படுவதற்கு வாய்ப்பு அளிப்பதாகும். குறிப்பாக Whatsapp, Twitter, Facebook அல்லது வேறு வழிகளில் இந்த செய்திகள் பரவும்போது எதிரிகளுக்கு இன்னும் அதிகமாக வாய்ப்பு அளிக்கக் கூடியதாக அவை அமையும்.

எனவே, நாம் எதிரிகளின் அநீதி மற்றும் கொடுமைகளுக்கு எதிராக நாம் அநீதி மற்றும் கொடுமைகளைக் காட்டக் கூடாது என்ற போதனையையே நாம் பெற்று வந்துள்ளோம். நாம் அத்தகைய முறையில் நமது எதிர்நடவடிக்கையை வெளிப்படுத்தப் போவதில்லை. மேலும் அரசாங்கங்களுக்கு எதிராக ஆயுதம் ஏந்தப்போவதும் இல்லை. நமது எதிர்ப்பெல்லாம் துஆ என்ற ஆயுதம் மூலமாகவே நடைபெறுகிறது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு இந்த போதனையைத்தான் வழங்கியுள்ளார்கள். அல்லாஹ்வின் உதவியையும் அவனது நேசத்தையும் பெற வேண்டும் என்றால், எதிரிகளின் தாக்குதல் மற்றும் வரம்பு மீறலுக்கான பதிலை அதேபோன்று தருவதில்லை. மாறாக, பொறுமை மற்றும் துஆவை பயன்படுத்த வேண்டும். அப்போதுதான் நாம் வெற்றியைப் பார்ப்போம்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒரு ஃபார்ஸி கவிதையில் கூறுகின்றார்கள்: என் அன்பிற்குரியவர்களே! களங்கமற்ற தன்மையும், உண்மையும், உறுதியும் இன்றி எந்தத் தகுதியையும் அடைய முடியாது. தூய துளிகளாக மாறுங்கள். அதன் மூலமே ரத்தினங்களும் முத்துக்களும் உருவாகின்றன.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: யாரெல்லாம் எனது ஜமாஅத்தில் இணைந்துள்ளார்களோ அல்லாஹ் உங்களுக்கும் எனக்கும் அவன் திருப்தி அடையும் காரியங்களைச் செய்யும் வாய்ப்பினை வழங்குவானாக!

இன்று நீங்கள் குறைவாக உள்ளீர்கள். அற்பமாகப் பார்க்கப்படுகிறீர்கள். இது உங்கள் மீதுள்ள ஒரு சோதனைக் காலமாகும். இதுவே அல்லாஹ்வின் நடைமுறைக்கு அது தொன்று தொட்டே இருந்து வருகின்றது. ஒவ்வொரு தரப்பிலிருந்தும் உங்களை தடுமாற வைக்க முயற்சி செய்யப்படும். நீங்கள் எல்லாப் புறமிருந்தும் தொல்லை தரப்படுவீர்கள். விதவிதமான வார்த்தைகளை நீங்கள் கேட்க வேண்டியிருக்கும். ஒவ்வொருவரும் உங்களுக்கு நாவினாலும் கைகளினாலும் துன்பமிழைப்பர். இதன் மூலம் இஸ்லாத்திற்கு ஆதரவு தருவதாக அவர்கள் நினைப்பார்கள். நமது பெரும்பாலான எதிரிகளும் பொதுமக்களும் குறைமதியின் காரணமாக நம்மை எதிர்க்கிறார்கள். அஹ்மதிகளை எதிர்ப்பது இஸ்லாத்தின் மீது செய்யும் பெரும் சேவையாகும் என்று அவர்களின் மூளைகளில் மவ்லவிமார்கள் இவ்விஷயத்தை இட்டு விட்டார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இஸ்லாத்திற்கு சேவை செய்வதாக இவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். மேலும் சில வானத்தின் சோதனைகளும் உங்கள் மீது வரும். நீங்கள் எல்லா தரப்பிலிருந்தும் சோதிக்கப்படுவதற்காக அவ்வாறு செய்யப்படும். எனவே, நீங்கள் இப்போது கேட்டு வைத்துக் கொள்ளுங்கள். உங்களது வெற்றி மற்றும் மேலோங்குவதற்கு உங்கள் வறண்ட வாதங்களைப் பயன்படுத்துவதும் ஏளனத்திற்கு பதில் ஏளனம் செய்வதும், ஏச்சுக்குப் பதில் ஏசுவதும் வழியல்ல. நீங்கள் இந்த வழியைப் பின்பற்றினால் உங்கள் உள்ளம் கடினமாகி விடும். உங்களிடம் வெறும் வார்த்தைகள் மட்டுமே எஞ்சியிருக்கும். அதனை இறைவன் வெறுக்கிறான். வெறுப்பின் பார்வையால் பார்க்கிறான். எனவே நீங்கள் உங்கள் மீது இரு சாபங்களை அதாவது ஒன்றை மக்களிடமிருந்தும் மற்றொன்றை இறைவனிடம் இருந்தும் சேர்த்து வைத்துக் கொள்கிறீர்கள். (இஸாலயே அவ்ஹாம். ரூஹானி கஸாயின் தொகுதி 3 பக்கம் 546-457)

எனவே, நாம் இந்த போதனையின்படி தான் செயல்பட வேண்டும். இந்த வழிகாட்டுதலின்படிதான் நடக்க வேண்டும். இதனையே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு தந்துள்ளார்கள். நாம் ஏச்சுக்குப் பதில் ஏச்சும், குழப்பத்திற்கு பதில் குழப்பமும் செய்யக் கூடாது. சட்டத்தை நமது கையில் எடுக்கவும் கூடாது. பிறகு, பாகிஸ்தான் மற்றும் பிற முஸ்லிம் நாடுகளில் சட்டத்தால் அனுமதிக்கப்பட்ட வழிகளில் தற்காப்பு செய்யலாம். சட்டம் நமக்கு ஆதரவு அளிப்பதற்குப் பதில் அநீதியிழைப்பவர்களுக்கு ஆதரவளிப்பதையே பெரும்பாலும் காண முடிகிறது. அநீதியிழைக்கப்படுகிற அஹ்மதிக்கு சிறைவாசிகளின் தரப்பு ஜாமீன் கூட ஏற்கப்படுவதில்லை. காரணம் நீதிமன்றம் மவ்லவிக்கு முன் ஒன்றும் செய்ய முடியாமல் இருக்கின்றது. நீதிமன்றத்திற்கு வெளியில் நின்று மவ்லவி நீதிமன்றத்திற்குள் தூதுச் செய்தி அனுப்புகிறார். இவருக்கு ஜாமீன் வாங்கினால் உமது நிலைமையை நீர் பிறகு பார்த்துக் கொள்வீர் என்று மிரட்டுகின்றனர். எனவே, பயத்தின் காரணமாக பெரும்பாலான நீதிபதிகள் தீர்ப்பு சொல்லாமல் அடுத்த தேதிக்கு ஒத்தி வைத்து விடுகின்றனர்.

எனவே, சட்டத்தை செயல்படுத்துகிற வட்டம் நமக்கு ஆதரவு அளிப்பதும் இல்லை. சட்டம் நீதியை நிலைநாட்டவும் தயாராக இல்லை. நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்துவது நமது போதனையல்ல. எனவே, ஒரே வழிதான் உள்ளது. அல்லாஹ்வின் வாசலைப் பற்றிப் பிடியுங்கள். துஆவை அதன் எல்லைக்கு எடுத்துச் செல்லுங்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: துஆ மற்றும் அது ஏற்றுக் கொள்ளப்படும் காலம் இரண்டுக்கும் இடையிலுள்ள காலத்தில் பெரும்பாலும் சோதனைக்கு மேல் சோதனை வருகிறது. எத்தகைய சோதனைகள் வருகின்றன என்றால் அது இடுப்பை ஒடித்து விடுகிறது. ஆனால் நிரந்தரமான நற்பண்பையும், நல்லியல்பையும் கொண்டவர் இத்தகைய சோதனையின் காலத்திலும் கூட தமது துஆ ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கான நறுமணத்தை நுகர்கிறார். தொலைநோக்குடன் பார்க்கிறார். அதன் பிறகு இறை உதவி வருகிறது. இந்த சோதனைகள் வருவதன் இரகசியம் என்னவென்றால் துஆவுக்காக ஓர் எழுச்சி உருவாகிறது. ஏனெனில் எந்த அளவுக்கு நெருக்கடிகள் அதிகமாகின்றனவோ அந்த அளவுக்கு ஆன்மாவில் ஒரு நெகிழ்வு ஏற்படுகிறது. அது துஆ ஏற்றுக் கொள்ளப்படுதலின் காரணிகளுள் ஒன்றாகும். எந்த அளவுக்கு மனித உள்ளம் அழுகிறதோ, கரைகிறதோ, உருகுகிறதோ அந்த அளவுக்கு இறைவனே துஆ ஒப்புக் கொள்ளப்படுவதற்கான வழியை ஏற்படுத்துகிறான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: எனவே ஒருபோதும் பதற்றமடையக் கூடாது. பொறுமையின்மையாலும், உறுதியின்மை –யாலும் தமது அல்லாஹ்வின் மீது தவறான எண்ணம் கொள்ளக் கூடாது. (மல்.ஃபூஸாத் தொகுதி 4, பக்கம் 434,435 ; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

ஆக, இதுவே நமது கடமையாகும். நிச்சயமாக அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு தந்த வாக்குறுதி உண்மையானது. நிச்சயமாக அல்லாஹ் துஆக்களைக் கேட்கிறான். நம்மில் ஒவ்வொருவரும் தம்மை ஆய்வு செய்ய வேண்டும். அல்லாஹ் நம்மிடம் விரும்புகிற துஆவின் உயர் தரத்தை நாம் பெற்று விட்டோமா? உலகியல் காரணிகளில் பார்வையை வைப்பதற்குப் பதிலாக துஆ ஒப்புக் கொள்ளப்படத்தக்க, ஆன்மாவில் உருக்கம் ஏற்படுத்தத்தக்க தகுதியைப் பெற்று விட்டோமா? என்று பார்க்க வேண்டும். இந்த தகுதிகளை அல்லாஹ்வே அறிவான். நாம் முயன்றாலும் அறிய முடியாது. எனவே நான் அந்நிலையைப் பெற்று விட்டேன் என்று எவரும் கூற இயலாது. நமது நிலை நமக்கு தெரியாது. அல்லாஹ்வே நன்கறிந்தவன். நமது பணி பொறுமை மற்றும் துஆவுடன் அல்லாஹ்வின் கையைப் பற்றியிருப்பதாகும். நம்மில் எவராவது பொறுமை இழந்தால் அவர் தனக்கே நஷ்டமிழைப்பார். கஷ்டத்தில் உழலக்கூடிய நாடுகள் குறிப்பாக பாகிஸ்தானில் பெரும்பாலார் பொறுமையுடன் இருக்கின்றனர். துஆவும் செய்து கொண்டிருக்கின்றனர். ஈமானும் உறுதியாக உள்ளது. தூரத்தில் இருந்து கொண்டு வெளிப்படையான கஷ்டத்திலிருந்து தப்பித்திருப்பவர்கள் அதிகமாகப் பேசுகின்றனர். அவர்களுக்கு தமது சகோதரர்களுடன் உண்மையான அனுதாபம் இருக்கும் என்றால் அல்லாஹ்வின் கைகளைப் பற்றிப் பிடிக்க வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: ஒருவர் நம்மை ஏசினால் நமது முறையீடு இறை சன்னிதானத்தில் தான் உள்ளது. அது அல்லாமல் எந்த நீதிமன்றத்திலும் அல்ல. எனினும், மனித குலத்தின் மீது அனுதாபம் காட்டுவது நமக்கு கடமையாகும். (சிராஜே முனீர். ரூஹானி கஸாயின் தொகுதி 12 பக்கம் 28) ஏச்சுக்களைக் கேட்டும் கூட நாம் அனுதாபமே காட்ட வேண்டும். ஆகவே நம்மில் ஒவ்வொருவரும் நேரடியாக கஷ்டங்களைச் சந்திப்பவராக இருப்பினும் அல்லது அதனை சந்திக்காதவராக இருப்பினும் பொறுமை மற்றும் துஆவினை பற்றிப் பிடிக்க வேண்டும். இதுவே ஈமானின் அடையாளமாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது பின்னால் செல்வது எளிய காரியமல்ல என்பதை விளக்கியவாறு கூறுகின்றார்கள்: எனது அடியொற்றி செல்ல விரும்பாதவர் என்னை விட்டுப் பிரிந்து விடட்டும். எந்த அளவு காடுகள் போன்று அடர்ந்த துன்பம் துயரங்களை கடக்க வேண்டியதுள்ளது என்பது எப்படி தெரியும்? எவரது பாதங்கள் மென்மையாக உள்ளனவோ அவர் ஏன் என்னோடு சேர்ந்து கஷ்டப்படுகிறார்? எவர் என்னுடையவரோ அவர் என்னை விட்டுப் பிரிய முடியாது. கஷ்டங்கள் வந்தாலும் சரி, மக்களின் ஏச்சுப் பேச்சுகள் வந்தாலும் சரி வானத்தின் சோதனைகள் வந்தாலும் சரி எவர்கள் என்னுடையவராக இல்லையோ வெறுமனே என்னுடைய நண்பர் என்று கூறிக் கொண்டு இருக்கின்றார்களோ அவர்கள் விரைவில் பிரிக்கப்பட்டு விடுவார்கள். அவரது பிந்தைய நிலை முந்தைய நிலையை விட மோசமாகி விடும். நாம் இந்த பூகம்பங்களால் பயப்பட முடியுமா? நாம் இறைவனது வழியில் சோதனைகளைக் கண்டு அவனை விட்டுப் பயந்து போவோமா? நாம் நமது அன்பிற்குரிய இறைவனின் ஏதாவது சோதனைகளைக் கண்டு பிரிந்து விடுவோமா? மாறாக, அவனது கருணை மற்றும் அருளால் ஒருபோதும் நாம் பிரிந்து போக முடியாது. எவர் பிரிந்து போக விரும்புகிறாரோ அவர் பிரிந்து போகட்டும். அவர்களுக்கு விடை கொடுக்கும் ஸலாம் கூறுகிறோம். ஆனால் நினைவில் கொள்ளுங்கள். தவறான எண்ணம் கொண்டு பிரிந்து சென்ற பிறகு ஏதாவது ஒரு வேளையில் வந்து குனிவார் என்றால் அல்லாஹ்விடம் அவர் பற்று மற்றும் நன்றியுணர்வுள்ள மக்கள் பெறுகிற கண்ணியத்தை ஒருபோதும் பெறமாட்டார். ஏனெனில் தவறான எண்ணத்தின் கறை பெரும் கறையாகும். (அன்வாருல் இஸ்லாம். ரூஹானி கஸாயின் தொகுதி 9 பக்கம் 23,24)

பிறகு நம்பிக்கை கொண்டவரின் தக்வாவின் தகுதி மிக உயர்ந்தது. எதிரிகளின் தரப்பிலிருந்து சோதனைகள் வந்த பிறகும் எல்லா வகையான விஷயங்களையும் அவர்கள் எதிர்த்து நின்றாலும் அவர்கள் அவற்றை பொருட்படுத்துவதில்லை. மற்றவர்களின் தரப்பிலிருந்து துக்கங்கள் வந்தாலும் கூட அவர்களின் தவறுகளையும் மன்னிப்பதற்கு தயாராக இருக்கின்றனர். குழப்பத்தை பரப்புவதில்லை. மாறாக, அவர்கள் அமைதியின் தூதுவராக இருக்கிறார்கள்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நிச்சயமாக நினைவில் கொள்ளுங்கள். நம்பிக்கை கொண்டவர்கள் மற்றும் இறையச்சம் உடையவரின் உள்ளத்தில் விஷமம் இருக்காது. எந்த அளவு நம்பிக்கை கொண்டவர், இறையச்சம் உள்ளவராக ஆகின்றாரோ அந்த அளவுக்கு அவர் பிறர் மீது தண்டனைகள் கொடுக்கப்படுவதை விரும்புவதில்லை. தக்வா உயர உயர கருணை உணர்வும் அதிகரிக்கிறது. எதிரிகளுக்கும் கூட தண்டனையோ கஷ்டமோ வருவது அவருக்கு விருப்பமாக இருப்பதில்லை.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: முஸ்லிம் ஒருபோதும் காழ்ப்புணர்ச்சி கொண்டவராக இருக்க மாட்டார். உண்மையான முஸ்லிம் அவ்வாறு இருக்க முடியாது. ஆயினும் பிற சமுதாயத்தினர் காழ்ப்புணர்ச்சி உடையவர்களாக இருக்கின்றனர். அவர்களின் இந்தக் காழ்ப்புணர்ச்சி ஒருபோதும் அவர்களது உள்ளத்தை விட்டு நீங்குவதும் இல்லை. பழிவாங்குவதற்கு எப்போதும் அவர்கள் முயன்று வருகிறார்கள்.

ஆனால், நாம் பார்க்கிறோம். நமது எதிரிகள் நமக்கு என்ன செய்தார்கள்? எந்த கஷ்டம், துக்கம் அவர்களால் நமக்கு தர இயன்றதோ அவற்றை அவர்கள் செய்தார்கள். இருந்தும் கூட அவர்களின் ஆயிரக்கணக்கான தவறுகளை மன்னிக்க நாம் இப்போதும் ஆயத்தமாக உள்ளோம். ஆகவே, என்னுடன் தொடர்பு வைத்திருப்போர் நினைவில் கொள்ளுங்கள். அவர்கள் எந்த மார்க்கத்தைச் சார்ந்தவராக இருப்பினும் அனுதாபம் காட்டுங்கள். மதம் மற்றும் சமுதாய பாகுபாடுகள் இன்றி ஒவ்வொருவருக்கும் நன்மை செய்யுங்கள். (மல்.ஃபூஸாத் தொகுதி 7 பக்கம் 285) மற்ற முஸ்லிம்களுக்கு வழிகாட்டி இல்லை. இதனால் அவர்களிடம் சீர்குலைவுகள் ஏற்படுகின்றன. தக்வாவில் இருந்து அவர்கள் தூர விலகுகின்றனர். ஆனால், நாம் அஹ்மதி முஸ்லிம்கள் ஆவோம். நமக்கு ஒரு வழிகாட்டியை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வடிவில் அல்லாஹ் வழங்கியுள்ளான். நமது ஒவ்வொரு செயலும் இஸ்லாமிய போதனைகளுக்கு ஏற்பவையாக இருக்க வேண்டும். நமது ஒவ்வொரு பேச்சும் தக்வாவை அடிப்படையாகக் கொண்டவையாக இருக்க வேண்டும். தற்காலிக உணர்வுகளிலிருந்து நாம் எப்போதும் விலக வேண்டும். நமது உள்ளங்களை அதில் எவ்வளவு இறையச்சம் உள்ளது என்று துளைத்துப் பார்க்க வேண்டும்.

தக்வா என்றால் என்ன? ஒரு நல்லவர், இறையச்சமுள்ளவரின் நடைமுறை எப்படி இருக்க வேண்டும் என்று விளக்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: உண்மையான தக்வாவுடன் அறியாமை இணையாது. உண்மையான தக்வா தன்னுடன் ஓர் ஒளியைக் கொண்டுள்ளது.

அல்லாஹ் கூறுகின்றான்.

يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْٓا اِنْ تَتَّقُوا اللّٰهَ يَجْعَلْ لَّكُمْ فُرْقَانًا وَّيُكَفِّرْ عَنْكُمْ سَيِّاٰتِكُمْ

நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் இறையச்சத்தில் உறுதியாக நில்லுங்கள். இறைவன் உங்களுக்கு மற்றவர்களை விட்டு ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்துவான். (8:30) وَيَجْعَلْ لَّكُمْ نُوْرًا تَمْشُوْنَ بِهٖ அந்த வித்தியாசம் என்ன –வென்றால், உங்களுக்கு ஓர் ஒளி தரப்படும். அந்த ஒளியுடன் அவனது எல்லா வழிகளிலும் செல்வீர்கள். (57:29) அதாவது அந்த ஒளி உங்களது எல்லா செயல்கள் மற்றும் ஒவ்வொரு பணியையும் ஒளி நிறைந்ததாக்கும். உங்கள் எல்லா சொல், செயல் ஆற்றல்கள் மற்றும் புலன்களிலும், உங்கள் கண்களிலும் ஒளி ஏற்படும். உங்கள் காதுகள், நாவுகள், விளக்கங்கள் மற்றும் உங்கள் ஒவ்வொரு அசைவும், அமைதியும் ஒளியாகி விடும். நீங்கள் ஒரு வழியில் சென்றால் அவ்வழி ஒளிமயமாகி விடும். சுருக்கமாக உங்கள் வழிகள் அனைத்தும் எல்லா ஆற்றல்களின் வழிகள், உங்கள் புலன்களின் வழிகள் ஆகிய அனைத்தும் ஒளியால் நிரப்பப்படும். அதாவது கை, கால், உடல் மற்றும் எதனை எடுத்து வைக்கிறீர்களோ அவை அனைத்தும் ஒளியைப் பரப்புவதற்காக இருக்கும். உங்கள் சிந்தனைகள் ஒளியை மட்டுமே பரப்புபவையாக இருக்கும். ஒளியால் நிரப்பப்படும். நீங்கள் தலை முதல் கால் வரை ஒளி நிரம்பிய நிலையில் செல்வீர்கள்.

(ஆயினயே கமாலாத்தே இஸ்லாம். ரூஹானி கஸாயின் தொகுதி 5 பக்கம் 177-178)

ஆகவே, நமது விஷயங்களில் எவர் அறிவிலிருந்து விலகியவாறு வேகத்தைக் காட்டுகிறார்களோ அதில் தக்வா இல்லை. நமது செயல் இஸ்லாமிய போதனைகளுக்கேற்ப இல்லை எனில் அதுவும் தக்வா இல்லை. நமது சொல்லிலும் செயலிலும் அல்லாஹ்வின் ஒளி வெளிப்படவில்லையெனில் நாம் நமது தக்வா பற்றி கவலைப்பட வேண்டும். நாம் காலத்தின் இமாம் கூறிய போதனைகள் மற்றும் அறிவுரைகளின் படி செயல்படவில்லையெனில் அந்த ஒளியிலிருந்து விலகி விடுவோம். கட்டுப்படுதலின் காரணத்தால் அல்லாஹ்விடமிருந்து அவை நமக்கு கிடைக்க வேண்டியுள்ளது. ஆகவே, நாம் முதலில் நம்மை ஆய்வு செய்ய வேண்டும். நமது தக்வாவின் தரம் உயர்ந்து நமக்கு அல்லாஹ்வின் ஒளி கண்ணுக்குத் தெரிகிறதா என்று பார்க்க வேண்டும். நமது துஆக்கள் உருக்கத்தின் உச்ச எல்லைகளைத் தொடுகின்றனவா? என்று பார்க்க வேண்டும். ஒரு சரியான துஆ செய்பவரிடம் இருக்க வேண்டிய அளவுக்கு அது இருக்கிறதா? என்று பார்க்க வேண்டும். அல்லாஹ் விரும்பும் அளவுக்கு இவை இருந்தால் அல்லாஹ்வின் உதவி நமக்கு அருகில் உள்ளது என்று உறுதி கொள்ள வேண்டும். பிறகு அல்லாஹ்வே நமக்காக நாட்டையும் உருவாக்குவான். நமக்காக பூமியையும் வலுப்படுத்தித் தருவான் – இன்ஷா அல்லாஹ். அதிலிருந்து விலகி அதனை அடைய விரும்பினால் எதுவும் கிடைக்காது. நமக்கு முன்னால் இந்த அமைப்புகளின் உதாரணங்கள் உள்ளன. அவை இஸ்லாத்தின் பெயரால் அளவற்ற வசதி வாய்ப்புகளுடன் மில்லியன்கணக்கில் பில்லியன்கணக்கில் டாலர்கள் செலவு செய்து இஸ்லாமிய அரசாங்கத்தை உருவாக்க நினைக்கின்றன. ஆனால், குழப்பம், அநீதி, அட்டூழியம் தவிர அவர்களால் வேறெதுவும் செய்ய முடியவில்லை. தற்காலிகமாக கைப்பற்றியவையும் கை விட்டுப் போயின. இஸ்லாத்திற்கு அவப்பெயர் ஏற்படுத்துபவையாகவே அவை இருக்கின்றன. அவர்கள் இஸ்லாத்திற்கு சேவை செய்வதாக எவரும் கூறமாட்டார். இஸ்லாத்திற்கு சேவை செய்வது, பரப்புவது என்பது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலமாகவே நடை பெறும் என்பது விதிக்கப்பட்டதாகும். அவர்களின் ஜமாஅத்

மூலமே அது நடைபெறும். நாம் அல்லாஹ்வால் அனுப்பப்பட்டவரின் அடியொற்றி நடப்பதன் மூலமே இது சாத்தியமாகும். அது அல்லாமல் நாம் உலகியல் ரீதியாக எவ்வளவுதான் முயன்றாலும் எதனையும் பெறுவதற்கு நம்மிடம் சக்தியும் இல்லை; வாய்ப்பும் இல்லை. நாம் தக்வாவை உருவாக்கினோம் எனில், நமது உள்ளங்களில் இறையச்சத்தை உருவாக்கினோம் எனில், நாம் நமது துஆவை அதன் எல்லை வரை கொண்டு சென்றோம் எனில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், திருக்குர்ஆன் வசனத்தின் அடிப்படையில் கூறியதுபோன்று நமக்கு ஆற்றலும், ஒளியும் வழங்கப்படும். அதற்கு எதிரில் பெரும் சக்திகளால் நிற்க இயலாது.

அல்லாஹ் இதுவும் கூறியுள்ளான்: اَکْرَمَکُمْ عِنْدَ اللّٰہِ اَتْقٰکُمْ அல்லாஹ்வின் பார்வையில் உங்களுள் மிகவும் கண்ணியமிக்கவர் எல்லாரையும் விட இறையச்சமுள்ளவரே. (49:14) அல்லாஹ் என்ன தவறாகவா கூறுகிறான்? ஒருபுறம் இறையச்சம் உள்ளவரை கண்ணியவான் என்று கூறி விட்டு, மற்றொருபுறம் உலக வாதிகளின் முன் அவர்களை இழிவுபடுத்தி விட்டு விடுவானா? நிச்சயமாக அவ்வாறு செய்ய மாட்டான். நபிமார்கள் மற்றும் அவர்களது ஜமாத்திற்கு எதிர்ப்புகளைச் சந்திக்க நேரிடுகிறது என்பது சரிதான். இவ்வாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எதிரிகள் நஷ்டம் அடையவில்லையா? என்று தாமே கேட்கின்றார்கள். ஒவ்வொரு வழியிலும் தடையை ஏற்படுத்த எதிரிகள் முயன்றனர். ஒவ்வொன்றையும் கடந்து ஜமாஅத் பரவவில்லையா? மலரவில்லையா? எதிரிகள் உட்புற ஆயுதங்களால் நம்மை சோதித்துப் பார்த்தனர். வெளியிலிருந்தும் தாக்குதல்கள் இருந்தன. ஆனால், ஜமாஅத் முன்னேற்றத்தின் பாதையில் அடி வைத்தவாறு இன்று 209 நாடுகளில் நிலைநாட்டப்பட்டு விட்டது. ஓரிடத்தில் அழுத்தப்பட்டால் பிற 10 இடங்களில் முன்னரை விட அதிகமாக பரவுவதற்கான ஏற்பாட்டை அல்லாஹ் செய்கிறான்.

அல்லாஹ் கூறுகிறான்: தக்வாவில் வளர்ந்துள்ள ஒரு மனிதனுக்கு கண்ணியம் தராமல் விட மாட்டோம். இறைவன் தானே ஒருவரை அனுப்பியுள்ளான். கடந்த 125 ஆண்டுகளாக அவருக்கு அல்லாஹ் உதவி செய்து வருவதைப் பார்க்கிறோம். இன்று அல்லாஹ் பிற வாக்குறுதிகளையும் நிறைவேற்றாமல், கண்ணியப்படுத்தாமல் விட்டு விடுவானா? இது நடக்க முடியாது. ஆனால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், இவை அனைத்தும் உறுதியான பாதங்களுடன் நின்று, நிலையான நன்மைகளை செய்வதனால்தான் முடியும் என்பது நிபந்தனையாகும் என்று கூறினார்கள். பிறகு, நாம் நிரந்தரமான நன்மையுடன் அல்லாஹ்வின் பாதத்தைப் பற்றியிருப்போம் எனில் எதிரிகள் எரிந்து சாம்பலாவதையும் நாம் பார்ப்போம் – இன்ஷா அல்லாஹ்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: உங்கள் வாழ்வு, உங்கள் மரணம், உங்களின் ஒவ்வோர் அசைவு, உங்கள் மென்மை, உஷ்ணம் அதாவது கனிவான நடத்தை மற்றும் கோபம் ஆகிய அனைத்தும் இறைவனுக்காகவே ஆகி விட்டால், சுய காரணங்களுக்காக எவருடனும் கோபம் கொள்ளாமலும் உலகப் பொருளைப் பார்த்து மகிழ்ந்து போகாமலும் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காகவும் அலை இருந்து விட்டால், மேலும் ஒவ்வொரு துன்பம் சூளும் வேளையில் இறைவனை சோதனை செய்யாமல் இருந்து விட்டால் அவனது தொடர்பை விடமாட்டீர்கள் என்றால் மேலும் மேலும் முன்னேயே அடியெடுத்து வைப்பீர்கள் என்றால் நான் உண்மையாகவே கூறுகிறேன். நீங்கள் இறைவனின் சிறப்பான சமுதாயமாகி விடுவீர்கள். நீங்களும் என்னைப் போன்ற மனிதர்கள்தான். எனது இறைவனே உங்களது இறைவன் ஆவான். எனவே, உங்கள் தூய ஆற்றல்களை வீணாக்காதீர்கள். நீங்கள் முழுமையாக இறைவன் முன் குனிவீர்கள் என்றால், நான் இறை விருப்பத்திற்கேற்ப கூறுகிறேன். நீங்கள் இறைவனது தேர்ந்தெடுக்கப்பட்ட சமுதாயம் ஆகி விடுவீர்கள். இறை கண்ணியத்தை உங்கள் உள்ளங்களில் அமர்த்துங்கள். அவனது தவ்ஹீதை நாவினால் மட்டுமின்றி செயல்ரீதியாக ஒப்புக் கொள்ளுங்கள். இறைவனும் செயல் ரீதியாக தனது கருணையையும் பேரருளையும் வெளிப்படுத்துவான்.

(அல் வஸிய்யத். ரூஹானி கஸாயின் தொகுதி 20 பக்கம் 308)

ஆகவே, நாம் எல்லாரும் நமது நிலைமைகளில் மாற்றத்தை ஏற்படுத்த முயற்சி செய்ய வேண்டும். பலவீனமானவர்கள் தம்மை ஆய்வு செய்யட்டும். தம்மை சிறந்தவர்களாகக் கருபவரும் நன்மையில் முன்னேறுவதற்கு இன்னும் வழியைத் தேடட்டும். சிறந்தவர் யாரென்று அல்லாஹ்வே அறிவான். எந்த அளவுக்கு நாம் நமது நோக்கங்களை எய்தியிருக்கிறோம் என்பதை அவனே அறிவான். ஓரிடத்தில் நாம் தேங்கி இருப்பதை அவன் பார்க்க விரும்புவதில்லை. நான் முன்னேற்றமடைந்து விட்டேன். நன்மையில் முன்னேறி விட்டேன் என்று எவரும் கருத வேண்டாம். நாம் நமது தகுதியை உயர்த்துவதற்கு அவசியம் உள்ளது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்: இறைவன் என்னை விளித்து, எனது ஜமாஅத்திற்கு தெரிவிக்குமாறு கூறினான். எவர்கள் ஈமான் கொண்டார்களோ – அதுவும் உலகக் கலப்பில்லாத ஈமான் கொண்டார்களோ அந்த ஈமான் நயவஞ்சகம், கோழைத்தனம் கலக்காததாக இருந்தால், அந்த ஈமான் கீழ்ப்படிதலின் எந்த தரத்திலிருந்தும் விலக்கப்பட்டதாக இல்லை என்றால் அந்த ஈமானை உடைய மக்கள் இறைவனுக்கு பிரியமானவர்களாவர். அவர்களின் பாதமே உண்மையான பாதமாகும் என்று இறைவன் கூறுகின்றான். (அல் வஸிய்யத். ரூஹானி கஸாயின் தொகுதி 20 பக்கம் 309)

ஆகவே, உண்மையின் பக்கம் நாம் அடியெடுத்து வைக்க வேண்டிய தேவை உள்ளது. அதன் மூலம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் தொடர்புள்ள வெற்றியை நாம் காண்பதற்காக அவ்வாறு செய்ய வேண்டும். அதனை அல்லாஹ் உங்களுக்காக நிர்ணயித்துள்ளான். இந்த சோதனையின் காலம் நிச்சயமாக முடிவடையக் கூடிய காலமாகும். ஆனால் இதில் வேகம் ஏற்படுவதற்காக நாம் நமது தக்வாவின் தகுதிய உயர்த்திக் கொண்டே செல்வது அவசியமாகும். நிச்சயமாக அல்லாஹ் இக்காலத்தில் இந்த ஜமாஅத்தை நிறுவுவதற்கான காரணம் இஸ்லாத்தின் புகழை உலகில் உயர்த்தி, எல்லா மார்க்கத்தின் மீதும் இஸ்லாத்தை வெற்றி பெற வைப்பதாகும். அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களிடம் இந்த வாக்குறுதியைத் தந்துள்ளான். இந்த ஜமாஅத் வளரும்; மலரும்; பரவும். எந்த உலகியல் ஆற்றலும் அதனை முடிக்க இயலாது. அல்லாஹ் உங்களை வீணாக்கி விடுவான் என்று ஒருபோதும் கருதாதீர்கள். நீங்கள் இறைவனது கையால் பூமியில் விதைக்கப்பட்ட விதைகளாவீர்கள்.

இறைவன் கூறுகிறான்: இந்த விதை வளரும்; மலரும்; எல்லா புறமும் அதன் கிளை பரவும். அது பெரும் மரமாகி விடும். (அல் வஸிய்யத். ரூஹானி கஸாயின் தொகுதி 20 பக்கம் 308) நம்மில் ஒவ்வொருவரும் இம்மரத்தின் பரவக்கூடிய மலரக்கூடிய கிளைகள் ஆவோமாக! ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது ஜமாஅத்திடம் கொண்டிருந்த எதிர்பார்ப்புகளை நாம் நிறைவேற்றுவோமாக! தக்வாவில் முன்னேறுவோமாக! பொறுமை மற்றும் துஆவுடன் எதிரிகளின் ஒவ்வொரு தாக்குதலையும் தோல்வியடையச் செய்வோமாக! அல்லாஹ் அதற்கான ஏற்பாட்டை செய்வானாக!

தொழுகைக்குப் பிறகு நான் ஒரு ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பேன். இது கண்ணியத்திற்குரிய மலிக் காலித் ஜாவீத் சாஹிப் உடையதாகும். இவர் கண்ணியத்திற்குரிய மலக் அய்யூப் சாஹிபின் மகனாவார். சக்வால் மாவட்டம் துல்மியான் ஊரைச் சார்ந்தவர். இவருக்கு 69 வயது. 12 டிசம்பர் 2016 அன்று துல்மியானிலுள்ள தாருஸ் ஸிக்ர் மஸ்ஜிதில் இதயத் துடிப்பு நின்றதன் காரணமாக இவர் வஃபாத் ஆகி விட்டார். اِنَّا لِلّٰہِ وَاِنَّا اِلَیْہِ رَاجِعُوْنَ

கிடைத்த விபரத்தின்படி இவர் 12 டிசம்பர் 2016 அன்று ரபீவுல் அவ்வல் 12 –ஐக் கொண்டாடிய எதிரிகள் துல்மியான் சக்வாலில் பெரும் ஊர்வலம் நடத்தினர். திட்டமிட்ட சூழ்ச்சியின்படி தாங்கள் நிர்ணயித்த பாதையை மாற்றி அஹ்மதிய்யா தாருஸ் ஸிக்ரின் மீது தாக்குதல் தொடுத்தனர் அல்லது பள்ளிவாயிலின் மீது தாக்குதல் தொடுத்தனர். பள்ளிவாயிலுக்கு வெளியில் வந்து தகாத வார்த்தைகளில் கோஷமிட்டனர். மேலும் மஸ்ஜிதின் கேட்டை உடைக்கத் தொடங்கினர். பள்ளிவாயிலினுள் நம்மக்கள் இருந்தனர். அவர்களுள் காலித் சாஹிபும் இருந்தார். மர்ஹூமின் குடும்பத்தினரின் கூற்றுக்கேற்ப மர்ஹூமுக்கு முன்னர் ஒருபோதும் நெஞ்சு வலி வந்ததில்லை. இதயத்திற்காக எந்த மருந்தும் எடுத்ததும் இல்லை. சிகிச்சையின் கீழ் இருக்கவும் இல்லை. வஃபாத்திற்கு முன் ஒரு வார்த்தையைத் தொடர்ந்து கூறிக் கொண்டிருந்தார். எதிரிகள் தாக்கிக் கொண்டிருந்த போது மஸ்ஜிதிற்குள் இருந்த அவர் நான் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு எதிராக அசுத்தமான இதுபோன்ற தீய வார்த்தைகளை இதற்கு முன்னர் எப்போதும் கேட்டதில்லை என்று கூறியவாறே மயக்கமுற்றார். வெளியில் ஆயிரக்கணக்கான எதிரிகள் திரண்டிருந்த சூழ்நிலை காரணமாக காலித் சாஹிபை சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு எடுத்துக் செல்ல முடியவில்லை. இந்நிலையில் காலித் ஜாவிஸ் சாஹிப் அங்கேயே வஃபாத் ஆனார்கள். இன்னா....

அவர்களது குடும்பத்தில் அஹ்மதிய்யத் அவரது தந்தைவழிப் பாட்டி மூலமாக பரவியது. இவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபி ஹஸ்ரத் மவ்லவி கரம்தாஸ் சாஹிப் உடைய சகோதரி மகள் ஆவார். இவர் துல்மியான் ஜமாஅத்தை உருவாக்கியவர்களுள் ஒருவராவார். பாகிஸ்தானில் கட்டுப்பாடு உள்ளது. அதனால் சஹாபியை நண்பர் என்று அறிக்கையில் எழுதுகிறார்கள். மஸ்ஜிதை தாருஸ் ஸிக்ர் என்று எழுதுகிறார்கள். என்னிடம் தரும்போது திருத்தி டைப் செய்யுங்கள். சரியான இஸ்லாமிய சொற்களை எழுத வேண்டும். மர்ஹூம் அல்லாஹ்வின் அருளால் பிறப்பு அஹ்மதியாக இருந்தார். நற்பண்புகளை உடையவர். கட்டுப்படுதலும் கிலாஃபத்துடன் அளவு கடந்த அன்பும் கொண்டவர். ஐவேளை தொழுகையுடன் தஹஜ்ஜுத் தொழுபவராகவும், உரத்த குரலில் திருக்குர்ஆன் ஓதுபவராகவும் இருந்தார். நீண்ட காலம் ஷார்ஜாவில் பணியாற்றினார். கடந்த 20 வருடங்களாக துல்மியானுக்கு திரும்பி வந்திருந்தார். இவர் பல வருடங்களாக பள்ளிவாயிலேயே தமது நேரத்தைக் கழித்தார். பள்ளிவாயில் பணிகளில் பங்கெடுத்தார். மஸ்ஜிதின் பாதுகாப்புப் பணி மற்ற ஜமாஅத் பணிகளில் முன்னணியில் நிற்பவராக இருந்தார். திருக்குர்ஆன் ஓதுவதில் சிறப்பான பிரியம் இருந்தது. அவரது ஒரு மகன் ஸுப்ஹான் அய்யூப் சாஹிபை குர்ஆன் மனனம் செய்ய வைத்தார். மர்ஹூம் தஃலீமல் குர்ஆன் செயலராகத் தொண்டாற்றி வந்தார். இது தவிர பல்வேறு ஜமாஅத் பணிகளைச் செய்யவும் இவருக்க வாய்ப்பு கிடைத்தது. இவரது நினைவாக மனைவி ஹைதரா பேகம் சாஹிபா அவர்களையும் தவிர மகன்கள் இருவர் ஸல்மான் காலித். இவர் யூ.கே –வில் வசிக்கிறார். ஹாஃபிஸ் ஸுப்ஹான் அய்யூப் மற்றும் இரு மகள்கள் அதா மர்யம், ஹிரா மர்யம் ஆகியோரையும் விட்டுச் சென்றுள்ளார். அல்லாஹ் மர்ஹூமின் தகுதியை உயர்த்துவானாக! இவரது சந்ததிகளிலும் இவரது நன்மைகளைத் தொடரச் செய்வானாக!

★ ★ ★ ★ ★

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

கொண்டிருந்தனர். பெண்களுக்காகவும் கூட பர்தாவிற்கான ஏற்பாட்டுடன் இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மேடையில் ஹுஸூர் அவர்களின் பிரதிநிதியுடன் ஆண்டு மாநாட்டின் அதிகாரியான மதிப்பிற்குரிய ஷுஐப் அஹ்மது சாஹிப் அவர்களும், மாநாட்டுத் திடலின் அதிகாரியான மதிப்பிற்குரிய முஸஃப்பர் அஹ்மது நாஸிர் சாஹிப் அவர்களும், படைப்பின சேவை அதிகாரியான மதிப்பிற்குரிய ரஃபீக் அஹ்மது பேக் சாஹிப் அவர்களும், மதிப்பிற்குரிய ஹாஃபிஸ் மக்தூம் ஷரீஃப் சாஹிப் அவர்களும், மதிப்பிற்குரிய முஹம்மது நஸீம் கான் சாஹிப் அவர்களும், மாநாட்டுத் திடலின் துணை அதிகாரியான மதிப்பிற்குரிய தாஹிர் அஹ்மது தாரிக் அஹ்மது சாஹிப் அவர்களும், மதிப்பிற்குரிய அப்துல் வகீல் நியாஸ் சாஹிப் அவர்களும், மதிப்பிற்குரிய ஹாபிஸ் மஸ்ஹர் அஹ்மது சாஹிப் அவர்களும், மதிப்பிற்குரிய மஸ்ஹர் அஹ்மது வஸீம் சாஹிப் அவர்களும், மதிப்பிற்குரிய எம். அபூபக்கர் சாஹிப் அவர்களும், ஆண்டு மாநாட்டின் துணை அதிகாரிகளான மதிப்பிற்குரிய ஹபீபூர் ரஹ்மான் கான் சாஹிப் அவர்களும், பொறியாளரான மதிப்பிற்குரிய ஃபரீத் அஹ்மது சாஹிப் அவர்களும் அமர்ந்திருந்தனர்.

ஜமாஅத்தின் முரப்பியான மதிப்பிற்குரிய முர்ஷிது அஹ்மது டார் சாஹிப் அவர்கள் திருக்குர்ஆன் ஓதினார்கள். அவர்கள் அல் பக்ரா அதிகாரத்தின் இறுதி ருகூவை ஓதி அதன் மொழியாக்கத்தைப் படித்தார்கள். இதற்குப் பிறகு ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் பிரதிநிதி பணியாளர்களுக்காக உரை நிகழ்த்தினார்கள். அப்போது அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: நம்முடைய இந்த ஆண்டு மாநாடு அல்லாஹ்வுக்காக நடத்தப்படும் ஆண்டு மாநாடாகும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அல்லாஹ் இதற்காக சமுதாயங்களை தயார் செய்துள்ளான். அவர்கள் விரைவில் இதில் வந்து கலந்து கொள்வார்கள் என்று கூறியுள்ளார்கள். எனவே, அவர்கள் நிம்மதியாக இருக்க இயன்ற வரை முயற்சி செய்வது நமது கடமையாகும். நாம் இந்த மாநாட்டின் பணிகளுக்கு ஆயத்தமாவதற்காக இங்கு ஒன்று கூடியுள்ளோம். அல்லாஹ் நமக்கு இதற்குரிய உரிமையைச் செலுத்தியவாறு இந்த பொறுப்பை நிறைவேற்றுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவதற்காக நாம் துஆ செய்ய வேண்டும்.

மேலும் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: மாநாட்டின் ஏற்பாடுகளுக்காக மூன்று துறைகள் உள்ளன. தங்குமிடம் மற்றும் உணவிற்கான ஏற்பாட்டைச் செய்பவர்கள் தொழுகை மற்றும் திருக்குர்ஆன் விளக்கவுரைகளுக்கான ஏற்பாட்டையும் மாநாட்டில் நிகழ்த்தப்படும் சொற்பொழிவிற்கான ஏற்பாட்டைச் செய்பவர்கள் மற்றும் படைப்பின சேவையில் ஈடுபடுபவர் என்று மூன்று துறைகள் உள்ளன.

பணியாளர்களுக்கு மாநாடுகளில் அவர்கள் கொடுக்கின்ற டியூட்டிகள் தொடர்பாக சில விஷயங்களின் பக்கம் கவனமூட்டியவாறு அன்னார் தொடர்ந்து இவ்வாறு கூறினார்கள்: ஒவ்வொரு தன்னார்வத் தொண்டரும் தனது டியூட்டியின் போது அவருக்குரிய இடத்தில் இருக்க வேண்டும். முழுமையான பொறுப்புணர்வுடன் தனது பணியைச் செய்ய வேண்டும். கவனமற்றவர்களாக இருப்பவர்களுக்கு அமைப்பாளர்கள் அன்புடன் கவனமூட்ட வேண்டும். என்ன வசதிகள் இருக்கின்றனவோ அவற்றிலிருந்து பயனடைந்தவாறு முழுமையான பொறுப்புணர்வுடன் தமது பணிகளை நிறைவேற்றுவது எல்லா தன்னார்வத் தொண்டர்களின் கடமை ஆகும். விருந்தினர்கள் தங்குமிடங்களிலுள்ள அறைகள் மற்றும் குளியலறைகள் போன்றவற்றை தூய்மையாக வைத்திருப்பதன் பக்கம் குறிப்பாக கவனம் செலுத்துங்கள். எப்போதும் அதை கண்காணித்து வர வேண்டும். பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாகவும் அவர்கள் கவனமூட்டினார்கள். ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் எப்போதும் இதன் பக்கம் கவனமூட்டிக் கொண்டே இருக்கின்றார்கள். அதாவது இந்த துறை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த துறையாகும். பொறுப்புணர்வுடனும் விழிப்புணர்வுடனும் நம்பிக்கை கொண்டவர்களின் தொலைநோக்குப் பார்வையுடனும் இந்தப் பணியைச் செய்யுமாறு அவர்கள் கூறியுள்ளார்கள். மேலும் கூறினார்கள்: ✤ எல்லா கடமைகளையும் மலர்ந்த முகத்துடன் நிறைவேற்றுங்கள். எந்த ஒரு கஷ்டமும் ஏற்பட்டு விடக்கூடாது. ✤ ஒவ்வொரு துறைக்கும் ஓர் அமைப்பாளரும் ஒரு துணை அமைப்பாளரும் இருக்கின்றார். அந்த இருவரில் ஒருவர் எந்நிலையிலும் இத்தகைய சந்தர்ப்பத்தில் அங்கு இருக்க வேண்டும். இது இந்த மாநாட்டின் ஆண்டு மாநாடாக இருந்தாலும் எந்நிலையிலும் இந்தக் காட்சியை நாம் பார்க்கின்றோம். அதாவது பல்வேறு சமுதாயங்களைச் சார்ந்த மக்கள் இங்கு வருகின்றனர். அவர்களுக்கு வழிகாட்டுவது என்பது மிகப்பெரும் பொறுப்பாகும். ✤ ஹுஸூர் அவர்களின் துஆவும் வழிகாட்டலும் நம்முடன் இருக்கின்றது. அவர்களிடமிருந்து எல்லா துறைகள் தொடர்பாகவும் விளக்கமான வழிகாட்டல் கிடைத்துக் கொண்டிருக்கின்றது என்பதற்காக நாம் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதுதான் அவசியமான விஷயமாகும். முழுமையான பொறுப்புணர்வுடன் இந்த சில நாட்களைக் கழியுங்கள். அல்லாஹ்விடம் நான் துஆ செய்கின்றேன். அதாவது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் செய்த துஆக்கள் வரும் விருந்தினர்களுக்காகவும் நம் எல்லாருக்காகவும் நிறைவேற வேண்டும்.

இறுதியில் நாஸிர் அஃலா அவர்கள் 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற யூ.கே -வின் மாநாட்டின் போது மாநாட்டுப் பணியாளர்கள் தொடர்பான ஆய்வு நிகழ்ச்சியில் அங்குள்ள மாநாட்டுப் பணியாளர்களுக்கு ஹுஸூர் அவர்கள் வழங்கிய சில வழிகாட்டல்களைப் படித்துக் காட்டினார்கள். அதில் ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: நாம் எந்தப் பணியைச் செய்தாலும் அதனை அல்லாஹ்வுக்காக செய்கின்றோம். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருந்தினர்களுக்காக அதை செய்கின்றோம். எனவே, இந்த நோக்கத்திற்காகவும் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காகவும் நமது பணிகளுடன் நமது நல்லொழுக்கமும் சிறப்பாக இருக்க வேண்டும். எப்போதும் நாம் புன்முறுவல் பூத்த முகங்களுடன் தொண்டு செய்ய வேண்டும். மனிதனின் பணிகளில் அமைப்பு ரீதியிலான பணிகளில் ஏற்பாடுகளில் குறைகள் இருக்கும். சிறந்த நிலையை அடைவதற்கான வாய்ப்புகள் எப்போதும் எஞ்சியிருக்கும். எந்நிலையிலும் எவ்வாறு நாம் நமது பணிகளிலும் ஏற்பாடுகளிலும் வசதிகளையும் சிறந்த நிலைமைகளையும் உருவாக்கிக் கொண்டே செல்கின்றோமோ அவ்வாறே நாம் நமது நல்லொழுக்கத்தின் தரங்களையும் கூட உயர்த்திக் கொண்டே செல்ல வேண்டிய தேவை இருக்கின்றது.

பொதுவாக அல்லாஹ்வின் அருளால் எல்லா பணியாளர்களுமே மிகவும் மகிழ்ச்சிகரமான உள்ளத்துடன் பணியாற்றுகின்றனர். மேலும் மக்களும் உங்களது பணிகளால் சிறந்த தாக்கத்திற்கு ஆளாகின்றனர். ஆனால், சில நேரங்களில் ஒரு சிலர் செய்யும் தவறானது முழு குழுவின் மீதும் ஒரு கறையை அல்லது கரும்புள்ளியை படிய வைத்து விடுகின்றது. எனவே, ஒத்துழைப்பு நல்குகின்ற ஒவ்வொருவரும், பணியில் இருக்கின்ற ஒவ்வொருவரும், அதிகாரியும், துணை அதிகாரியும், விருந்தினர்களின் துன்பத்திற்கு காரணமாக இருக்கின்ற எந்தவொரு விஷயமும் எங்கும் நடந்து விடக் கூடாது என்பதை கருத்தில் கொள்பவர்களாக இருக்க வேண்டும். ஏற்பாட்டில் உள்ள மோசமான நிலை தென்படும் வகையில் எந்தவொரு நிகழ்வும் நடந்து விடக் கூடாது. எப்போதும் சிரித்த முகத்துடனும் நல்லொழுக்கத்துடனும் இந்த தொண்டை செய்ய வேண்டும் என்பதை ஒவ்வொரு நபரும் நினைவில் கொள்ள வேண்டும். அல்லாஹ் உங்கள் அனைவருக்கும் இதற்கான நல்வாய்ப்பினை வழங்குவானாக!

பாதுகாப்பு தொடர்பாக ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: ஒவ்வொரு பணியாளரும் தத்தமது துறையில் எல்லா பக்கமும் தனது பார்வையை வைத்திருப்பது அவரது கடமை ஆகும். எந்தவொரு சாதாரண விஷயத்தையும் அவர் கண்டும் காணாமல் விட்டு விடக் கூடாது. இன்றைய நாட்களில் இவ்வாறு நாம் கண்டும் காணாமல் விட்டு விட்டால் சிறு சிறு விஷயங்கள் கூட பெரிய இழப்பிற்கு காரணமாக ஆகி விடும். மனித நேயத்தின் மீது கறை படிய வைத்துள்ள சில மக்கள், இஸ்லாத்தின் பெயரால் அநீதி இழைக்கின்ற சிலர் மனித உயிர்களை வீணாக்கி கொண்டிருக்கின்ற மக்கள் சிறு சிறு குறைகளை தேடிக் கொண்டிருக்கின்றனர். எங்கு அவர்களுக்கு அது தென்படுகின்றதோ அங்கு இழப்பை ஏற்படுத்த அவர்கள் முயற்சி செய்கின்றனர். எப்போதும் இந்த நினைவூட்டலின் தேவை இருந்து வருகின்றது. ஏனென்றால், பல பணியாளர்களும் இவ்வாறு இருக்கின்றனர். அவர்கள் தொழுகைகளின் நேரத்தின் ஜமாஅத்தாக தொழ முடியாமல் இருக்கின்றனர். எனவே, தத்தமது துறையிலுள்ள மேலதிகாரிகள் இந்த விஷயத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். அவர்களது துறையைச் சார்ந்த அலுவலகங்கள் எங்கெல்லாம் இருக்கின்றனவோ அல்லது அந்த அலுவலகங்களுக்கு அருகில் எந்த பணியாளர்கள் இருந்தாலும் அவர்கள் தமது பணியை முடித்த பிறகு ஜமாஅத்தாக தொழுகையை நிறைவேற்ற வேண்டும். ஏனென்றால் நமது பணிகள் துஆக்கள் இல்லாமல் நடைபெற முடியாது. இந்த விஷயத்தில் நாம் ஒவ்வொருவரும் எல்லா நேரமும் கவனம் செலுத்த வேண்டும். மேலும் இதுவே நமது வெற்றி மற்றும் முன்னேற்றத்தின் இரகசியமாகும். அல்லாஹ்வின் அருள் நம்முடன் இருக்கின்றது. அல்லாஹ்வின் அருளை ஈர்ப்பதற்கு அவன் முன்னிலையில் குனிவதும் அவசியமானதாகும்.

(அல் ஃபஸ்ல் இன்டர்நேஷனல் 26 ஆகஸ்டு 2016 பக்கம் 10)

துஆவுடன் மாநாட்டுப் பணியாளர்கள் தொடர்பான ஆய்வு நிகழ்ச்சி நிறைவு பெற்றது. முறையாக ஆண்டு மாநாட்டிற்கான டியூட்டிகளும் ஆரம்பமானது.

**முதல் நாள் - முதல் அமர்வு:**

காலையில் அதிகமாக பனிமூட்டம் இருந்தும் கூட அஹ்மதிகள் பேரார்வத்துடன் மாநாடு தொடங்குவதற்கு ஒரு மணி நேரம் முன்னதாகவே பாதுகாப்பிற்கான பரிசோதனையின் பல கட்டங்களையும் கடந்து பொறுமையுடன் மாநாட்டுத் திடலுக்குள் நுழைந்தனர். காலை சரியாக 10 மணி

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
RAFEEQ AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly BADAR Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

பதர் வாரப் பத்திரிகை காதியான்

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 2 Thursday 26 January 2017 Issue No. 4

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com
ANNUAL SUBSCRIPTION : Rs.300/-

5 நிமிடமான போது ஹுஸுர் அய்யதஹுல்லாஹுத்-தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் பிரதிநிதியான சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா காதியானின் தலைவரான மதிப்பிற்குரிய மவ்லானா ஜலாலுத்தீன் நய்யர் சாஹிப் அவர்கள் அஹ்மதிய்யத்தின் கொடியை ஏற்றி வைத்து துஆ செய்தார்கள். அதற்குப் பிறகு மேடையிலிருந்து முழக்கங்கள் எழுப்பப்பட்டன. அதற்கு உணர்வுப்-பூர்வமாக மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் பதில் கூறினர்.

சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா காதியானின் தலைவரான மதிப்பிற்குரிய மவ்லானா ஜலாலுத்தீன் நய்யர் சாஹிப் அவர்கள் இந்த அமர்விற்கு தலைமை தாங்கினார்கள். திருக்குர்ஆன் திலாவத்துடன் மாநாடு ஆரம்பமானது. மதிப்பிற்குரிய தாரிக் அஹ்மது லோன் சாஹிப் அவர்கள் சூரா அல் அன்பியாவின் 20 முதல் 28 வரை உள்ள வசனங்களை ஓதி அதன் மொழியாக்கத்தைப் படித்துக் காட்டினார்கள். அதற்குப் பிறகு மதிப்பிற்குரிய மாநாட்டின் தலைவர் அவர்கள் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அவர்கள் மாநாட்டில் கலந்து கொண்ட அனைவருக்கும் ஆண்டு மாநாட்டிற்கான வாழ்த்துக்களைத் தெரிவித்தவாறு ஆண்டு மாநாட்டின் குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்கள் பற்றி எடுத்து கூறினார்கள். அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகையின் நோக்கம் தொடர்பாகவும் நமது பொறுப்புகள் தொடர்பாகவும் கவனமூட்டினார்கள். தனது சொற்பொழிவின் இறுதியில் அவர்கள் 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்திய மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ்வின் வருடாந்திர இஜ்திமாவிற்காக ஹுஸுர் அவர்கள் அனுப்பி இருந்த தூதுச் செய்தியைப் படித்துக் காட்டினார்கள். அதில் ஹுஸுர் அவர்கள் கிலா∴பத்துடன் வலுவான தொடர்பை நிலை-நாட்டுவது பற்றி அறிவுரை வழங்கியிருந்தார்கள். சொற்பொழிவின் இறுதியில் மாநாட்டின் தலைவர் அவர்கள் துஆ செய்தார்கள். பிறகு மாநாட்டின் முதல் அமர்வின் நிகழ்ச்சிகள் ஆரம்பமானது. மதிப்பிற்குரிய காலித் வலீத் சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கவிதையை அழகிய குரலில் பாடினார்கள்.

இதற்கு பிறகு தென்னிந்தியாவிற்கான கூடுதல் நாஸிர் த∴வத்தே இலல்லாஹ்வான மதிப்பிற்குரிய மவ்லானா ஸஹீர் அஹ்மது காதிம் சாஹிப் அவர்கள் இறைவனின் இருப்பு (ஓரிறைமையும் உலகிலுள்ள மதங்களும்) என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார்கள். அவர்கள் சூரா ஆல இம்ரானின் 65 -வது வசனத்தின் ஒளியில் இறைவனை அடையாளம் கண்டு கொள்வதற்கு எல்லாவற்றிற்கும் முதலாவதாக அவனது இருப்பு மற்றும் அவனது பண்புகள் பற்றிய அறிவை பெறுவது அவசியமான-தாகும் என்று கூறினார்கள். அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஒரு மேற்கோளை சான்றாகக் காட்டி இவ்வாறு கூறினார்கள்: அதாவது, உண்மையான ஓரிறைமை மூன்று வகைப்படும். முதலாவதாக இறைவனது இருப்பின் அடிப்படையிலும், இரண்டாவதாக அவனது பண்புகளின் அடிப்படையிலும், மூன்றாவதாக ஒருவர் அந்த இறைவன் மீது வைத்திருக்கின்ற அன்பு, உண்மையான - தூய்மையான பற்று ஆகியவற்றின் அடிப்படையில் எவரையும் அவனுக்கு இணையாக்காமல் இருப்பது, அவனுக்காகவே தன்னை மாய்த்துக் கொள்வது ஓரிறைமையாகும். அவர்கள் இந்து மதம், கிறித்தவம், சீக்கிய மதம், இஸ்லாம் ஆகியவற்றின் ஒளியில் ஓரிறைமையைப் பற்றி குறிப்பிட்டவாறு இது தொடர்பாக அவர்கள், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், ஹஸ்ரத் நான்காவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள், ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் அய்யத்தஹுல்லாஹுத்-தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் ஆகியோரின் கூற்றுக்களை எடுத்துக் கூறியவாறு உலகில் அமைதியை நிலைநாட்டுவதற்கு இறைவன் மீது முழுமையான உறுதியும் ஓரிறைமையை ஏற்றுக் கொள்வதும் அவசியமானதாகும் என்று கூறினார்கள். இறுதியில் கிஷ்தி நூஹ் (நூஹின் கப்பல்) என்ற வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூலிலிருந்து ஒரு மேற்கோளைப் படித்துக் காட்டி அன்னார் தமது சொற்பொழிவை நிறைவு செய்தார்கள்.

இந்த அமர்வின் இரண்டாவதாக காதியான் ஜமாஅத்தின் உள்ளூர் அமீரும் நாஸிர் அ∴லாவும் ஆன மதிப்பிற்குரிய மவ்லானா முஹம்மது இனாம் கவ்ரி சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை, நீதி மற்றும் நேர்மையின் ஒளியில் என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார்கள். அவர்கள் சூரா அல் மாயிதாவின் 9 -வது வசனத்தை ஓதினார்கள். மேலும் இவ்வாறு கூறினார்கள்: திருக்குர்ஆனில் நீதி என்பதற்கு அத்ல் மற்றும் கிஸ்த் ஆகிய இரண்டு சொற்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. இரண்டு மனிதர்-களுக்கிடையில் சமமாக நடந்து கொள்வதற்கு அத்ல் என்று கூறப்படுகின்றது. கிஸ்து என்பது மற்றவர்களுடன் ஒப்பிடும்போது மிகவும் நீதியுடன் நடந்து கொள்வதாகும். நாஸிர் அ∴லா அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் வருகைக்கு முன்னர் இருந்த நிலைமைகள், அநீதி மற்றும் காட்டுமிராண்டித்தனம் ஆகியவற்றைப் பற்றி குறிப்பிட்டார்கள்.

மேலும் கூறினார்கள்: பெருமானர் (ஸல்) அவர்கள் விலங்குகளாக வாழ்ந்து வந்த இந்த மக்களை இறைவனை காட்டக் கூடிய மனிதர்களாக மாற்றினார்கள். இது தொடர்பாக அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சில மேற்கோள்களை எடுத்துக் கூறினார்கள். மேலும், குடும்ப வாழ்க்கையில் பெருமானார் (ஸல்) அவர்கள் கடைபிடித்த நீதி மற்றும் நேர்மையைப் பற்றி எடுத்துக் கூறியவாறு இது தொடர்பாக ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் ஸ∴பிய்யா (ரலி) ஆகியோரின் சாட்சியங்களை எடுத்துக் கூறினார்கள். மேலும் தமது தூய துணைவியர்களுடன் பெருமானார் (ஸல்) அவர்கள் எந்த அளவு அன்புடனும் நேசத்துடனும் நடந்து கொண்டார்கள் என்பதைப் பற்றியும் எடுத்து கூறினார்கள். அன்னார் நீதியுடன் நடந்து கொண்டது தொடர்பான ஈமானுக்கு எழுச்சியூட்டக் கூடிய சில சம்பவங்களை அவர்கள் எடுத்துக் கூறினார்கள். மேலும், இன்று நீதியையும் நேர்மையையும் நிலைபெறச் செய்கின்ற பொறுப்பு நம்மீது இருக்கின்றது என்றும் கூறினார்கள். இறுதியில் 'கவர்ன்மெண்ட் அங்ரேஸி அவ்ர் ஜிஹாது' என்ற ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூலிலிருந்து ஒரு மேற்கோளைப் படித்துக் காட்டி அவர்கள் தமது உரையை நிறைவு செய்தார்கள்.

இதற்குப் பிறகு அஹ்மதிய்யா ஜமாஅத் கிரிகிஸ்தானிலிருந்து அதன் பிரதிநிதியாக வந்திருந்த மதிப்பிற்குரிய உஸ்மான் கலாயீ பேக் சாஹிப் அவர்கள் அறிமுக சொற்பொழிவை நிகழ்த்தினார்கள். அவர்கள் அங்கு நிகழ்ந்த ஒரு ஷஹாதத்தைப் பற்றிக் குறிப்பிட்டவாறு கிரிகிஸ்தானில் ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்காக துஆ செய்யுமாறு வேண்டினார்கள். அதற்குப் பிறகு மாநாட்டு தலைவரின் அனுமதியுடன் அந்த அமர்வு நிறைவை எட்டியது.

**முதல் நாள் - இரண்டாம் அமர்வு:**

முதல் நாளில் இரண்டாவது அமர்விற்கு காதியான் ஜமாஅத்தின் உள்ளூர் அமீரும் நாஸிர் அ∴லாவும் ஆன மதிப்பிற்குரிய மவ்லானா முஹம்மது இனாம் கவ்ரி சாஹிப் அவர்கள் தலைமை தாங்கினார்கள். மதிப்பிற்குரிய ஹா∴பிஸ் நயீம் பாஷா சாஹிப் அவர்கள் சூரா அஸ்ஸ∴ப்பின் 7 முதல் 10 வரையுள்ள வசனங்களை ஓதி அதன் மொழியாக்கத்தைப் படித்துக் காட்டினார்கள். அதற்குப் பிறகு மதிப்பிற்குரிய தன்வீர் அஹ்மது நாஸிர் சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கவிதையை அழகிய குரலில் படித்துக் காட்டினார்கள். இந்த அமர்வில் முதலாவதாக தலைமையக நாஸிர் இஸ்லாஹ்-வ-இர்ஷாத் ஆன மதிப்பிற்குரிய மவ்லானா முஸ∴ப்பர் அஹ்மது நாஸிர் சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைத்துவம் - இறை உதவிகளின் ஒளியில் என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார்கள். அவர்கள் தமது சொற்பொழிவின் ஆரம்பத்தில் சூரா முஜாதிலாவிலுள்ள

كَتَبَ اللّٰهُ لَاَغْلِبَنَّ اَنَا وَرُسُلِيْ اِنَّ اللّٰهَ قَوِيٌّ عَزِيْزٌ

என்ற வசனத்தை ஓதினார்கள். மேலும் கூறினார்கள்: அல்லாஹ்வின் தொன்மையான நடைமுறை மற்றும் அவனது சட்டத்தின் ஒளியில் நாம் ஸய்யிதுனா ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வாதத்தைப் பற்றி சிந்திக்கும் போது அவர்களைப் பற்றிய உண்மை பட்டப்பகல் வெளிச்சம் போன்று நமக்கு தென்படுகின்றது. அவர்களுக்கு கிடைத்திருக்கும் வெற்றிகளைப் பார்த்து அவர்கள் அல்லாஹ்வின் தூதராக இருக்கின்றார்கள் என்பதில் எவ்வகையிலான சந்தேகமும் இருப்பதில்லை. அவர்களது பெயரை எவருமே அறிந்திருக்கவில்லை. ஆனால், அல்லாஹ் உலகின் எல்லைகள் வரை அவர்களை புகழ் பெற வைத்தான். ஓர் உலகமே அவர்களது உயிரின் பகைவராக ஆகி விட்டது. ஆனால், அல்லாஹ் அவர்களைப் பாதுகாத்தான். அவர்கள் மீது வழக்குகள் தொடரப்பட்டன. ஆனால், அல்லாஹ் அவர்களுக்கு கண்ணியத்தை வழங்கினான். எதிரிகள் தோல்வியைத் தழுவினர். இஸ்லாத்தை பரப்புவதற்காகவும் மார்க்கத்தை தப்லீக் செய்வதற்-காகவும் தூய உள்ளம் கொண்டவர்களின் ஒரு ஜமாஅத்தை அல்லாஹ் அவர்களுக்கு வழங்கினான்.

(தொடரும்...)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad